பக்கங்கள் 22+3

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஆவணி 25 செவ்வாய்க்கிழமை 09.09.2025 | அதிர்வு 41

## முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகளைப் பறிக்க உயர்நீதிமன்று பச்சைக் கொடி!

முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகளை ரத்து செய்வதற்கான சட்ட மூலத்தின் எந்தவொரு சரத்தும் அரசமைப்பின் எந்தவொரு அடிப்படை 04▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்


# முழுமையாகவே ‘13’; ஜெனிவாவில் மீளவும் இந்தியா வலியுறுத்து!

## தமிழர்களின் அபிலாஷைகளுக்கு முழு ஆதரவு




நாட்டின் அரசமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்துதல், மாகாணசபைத் தேர்தல்களை உடனடியாக நடாத்துதல் மற்றும் அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வை மேற்கொள்ளல் என்பவற்றுக்கு நடவடிக்கை எடுக்குமாறு ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கையை வலியுறுத்திய இந்தியா, சகலரையும் உள்ளடக்கிய அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வு மற்றும் நியாயமான நல்லிணக்க செயன்முறை என்பன நிலையான அமைதிக்கு வழிகோலும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

நாட்டின் அரசமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்துதல் என்பதன் மூலம் அரசமைப்பின் 13ஆம் திருத்தத்தின் முழு நடைமுறையாக்கத்தை மீண்டும் ஜெனிவாவில் வலியுறுத்தியுள்ளது இந்தியா எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது. 04▶



# மனிதப் புதைகுழிகளின் விசாரணை சர்வதேச தரத்தில் நடப்பது அவசியம்

## ஜெனிவா அமர்வில் பிரிட்டன் வலியுறுத்து

இலங்கையில் அடையாளம் காணப்பட்டுள்ள மனிதப் புதைகுழிகள் குறித்த விசாரணை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்றும், சர்வதேச தரத்தின்படி விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் பிரித்தானியா வலியுறுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60வது அமர்வில் இலங்கையின் மனித உரிமைகள் நிலைமை குறித்து ஐக்கிய இராச்சியம் (பிரித்தானியா) நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அதிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையை மனித உரிமைகளுக்கான பிரித்தானிய உயர் ஆணையர் எலினோர் சாண்டர்ஸ் முன்வைத்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது அமர்வு நேற்று சுவிட்சர்லாந்தின் ஜெனிவாவில் தொடங்கியது. 04▶

# இரத்தினபுரியில் பிரபல கணித ஆசிரியர் வகுப்பறையில் மயங்கி விழுந்து மரணம்!

(ஸ்ரீநிவாசகம் இரவீந்திரன்)

இரத்தினபுரி நகரில் அமைந்துள்ள பிரபல பாடசாலை ஒன்றில் கடமை புரிந்து வந்த ஆசிரியர் ஒருவர் பாடசாலை வகுப்பறையில் திடீரென மயக்கமுற்ற நிலையில் கீழே விழுந்து உயிரிழந் துள்ளார் என இரத்தினபுரி பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இன்று காலை 8.00 மணியளவில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் பிரபல கணித ஆசிரியரான ஆர்.தேவராஜ் (வயது 51) எனபவரே உயிரிழந்துள்ளார்.



பாடசாலையில் காலை பிரார்த்தனைக் கூட்டம் முடிவடைந்து மாணவர்கள் அனை வரும் வகுப்புக்குச் சென்ற நிலையில் இவரும் தனக்குரிய வகுப்புக்குச் சென்ற சொற்ப வேளையிலேயே இவர் மயக்க முற்று கீழே விழுந்துள்ளார்.

கீழே விழுந்த இவரை பாடசாலை நிர்வாகத்தினர் வைத்தியசாலைக்கு கொண்டு சென்று அங்கு சேர்த்த போதி லும் அங்கு சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார் என வைத்தியர்கள் தெரிவித்தனர்

இவர் மாரடைப்பு காரணமாகவே உயிரிழந்துள்ளார் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

# 'ஆர்மி சுரங்கா' கைது!

'ஆர்மி சுரங்கா' என்று அழைக்கப்படும் புத்திக லக்மால் என்ற முன்னாள் சிப்பாய், துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்கு மாகாண (தெற்கு) குற்றப்பிரிவு, ஹன்வெல்லவில் இந்தச் சந்தேக நபரை கைது செய்தது. அவர் 'ஹோமா கம ஹந் தயா' என்று அழைக்கப்படும் ஒழுங்கமைக் கப்பட்ட குற்றவாளியுடன் தொடர்புடை யவர் என்று சந்தேகிக்கப்படுகிறது.

சந்தேக நபரிடமிருந்து 12 போர் துப்பாக்கி மற்றும் மூன்று தோட்டாக்கள் பறிமுதல் செய்யப்பட்டன. துப்பாக்கி இரண்டு துண்டுகளாக பிரிக்கப்பட்டு ஒரு பையில் வைக்கப்பட்டிருந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.



கடந்த மாதம் ஹன்வெல்லவில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் அவர் ஈடுபட்டார் எனக் கூறப்படுகிறது. அதில் ஒருவர் சுடப்பட்டு காயமடைந்திருந்தார்.

# கல்முனையில் இரு பிரதேச செயலகங்களுக்கும் ஒரேயடியாக ஓர் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

## கூட்டத்திற்கு அம்பாறை அரசாங்க அதிபர் அறிவிப்பு

( வி.ரி.சகாதேவராஜா)


கல்முனையில் உள்ள கல்முனை பிரதேச செயலகம் மற்றும் கல்முனை வடக்கு உப பிரதேச செயலகம் ஆகிய இரு செயலகங்களுக்கும் பொதுவாக ஒரு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை நடத்த அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேயவிக்கிரம அறிவித்தல் விடுத்துள்ளார்.

இந்தக் கூட்டத்தை எதிர்வரும் 18 ஆம் தேதி கல்முனை பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் பணிமனையில் நடாத்த அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக ஏற்பாடு செய்துள்ளார்.

கிழக்கு மாகாண ஆளுநர் ஜெயந்த லால் ரத்னசேகரவின் வழிகாட்டலில் கூட்டம் அன்று காலை 9:30 மணிக்கு நடைபெற உள்ளது.

கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு, வலுவூட்டல் பிரதி அமைச்சரும் கல்முனை உப பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த பியதிஸ்ஸ மற்றும் கல்முனை பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்பு குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பின ருமான ஏ.ஆதம்பாவா ஆகியோர் தலைமை தாங்க இருக்கிறார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இது குறித்து தமிழ் மக்கள் தரப்பில் பாரிய எதிர்ப்பும் கண்டன மும் எழுப்பப்பட்டு வருவது குறிப்பிடத் தக்கது.



දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය - අම්පාර
மாவட்ட செயலகம் - அம்பாறை
DISTRICT SECRETARIAT - AMPARA

Government Agent 063 - 2222206 | Add. Gover. Agent 063-2223553 | General 063-2222233, 063-2222234 | Fax 063-2222236, 063-2222130

Your No. | My No. AMP/GA/PLN/4/DCC/25/8/26 | Date 2025.09.

**Divisional Coordinating Committee Meeting - Kalmunai & Kalmunai North Sub Division - 18.09.2025**

This is to inform you that with the direction of Prof. Jayantha Lal Ratnasekera, Hon. Governor of Eastern Province, the Divisional Coordinating Committee Meeting of Kalmunai has been scheduled as follows;

- Date : September 18, 2025
- Time : 9.30 a.m.
- Venue : Auditorium, Office of the Regional Director of Health Services, Kalmunai
- Chaired by : Hon. Deputy Minister of Rural development, Social Security, and Community Empowerment, L.G. Wasantha Piyatissa, Chairman, Divisional Coordinating Committee, Kalmunai North Sub Office and Hon. Aboobucker Athambawa, M.P, Chairman, Divisional Coordinating Committee, Kalmunai

02. Accordingly, you are hereby kindly informed to participate in the meeting.

03. Further, if there are any issues to be discussed, please submit the softcopy relevant proposals for consideration during the meeting to adpklplanning@gmail.com and hard copies to Divisional Secretary, Divisional Secretariat, Kalmunei on or before 08.09.2025.

Chinthaka Abeywickrama
District Secretary/Government Agent
Ampara

Chinthaka Abeywickrama
Government Agent
District Secretary
Ampara District

Copies:
1. Chairman, Divisional Coordinating Committee, Kalmunai North Sub Division, Deputy Minister of Rural development, Social Security and Community Empowerment, Hon. L.G. Wasantha Piyatissa - f.y.i.p.
2. Hon. Aboobucker Athambawa, M.P, Chairman, Divisional Coordinating Committee, Kalmunai - f.y.i.p.

Admin. / Esta. 063-2222236, 063-2222193 | Account Branch 063-2222131, 063-2222037 | Engineer 063-2222608

"புத்துணர்ச்சி சமுதாயத்தினைக் கொண்ட வளமிக்கதோர் மாவட்டம்"
"A PROSPEROUS DISTRICT WITH AN AWAKENED COMMUNITY"



# மன்னார்ப் போராட்டத்திற்கு நீதி கிடைக்க வேண்டும் இல்லை எனில் ஜனாதிபதி செயலகம் முன் போராட்டம்

## அறகலயவை முன்னின்று நடத்திய அருட்தந்தை ஜீவந்த பீரிஸ் எச்சரிக்கை

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னாரில் காற்றாலைக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போராட்டம் 38 ஆவது நாளாகவும் தொடர்ந்து செல்கின்ற நிலையில் ஜனாதிபதி காற்றாலைக்கு எதிராக நடவடிக்கை எடுக்காது விட்டால் எதிர்வரும் 19 ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்திற்கு முன் பாரிய போராட்டம் முன்னெடுக்கப்படும் என காலி முகத்திடல் போராட்டத்தை முன்னின்று நடத்திய அருட்தந்தை ஜீவந்த பீரிஸ் தெரிவித்தார்.

மன்னாரில் காற்றாலை மின் கோபுரம் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போராட்டம் இன்று செவ்வாய்க்கிழமை 38 ஆவது நாளாகவும் தொடர்ந்தது.

மன்னார் பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்ட இளையோர்கள் மற்றும் மக்கள் தொடர்ச்சியாக இந்தொ போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். போராட்டத்திற்கு நாளாந்தம் ஒவ்வொரு கிராம மக்கள்,வர்த்தகர்கள் உள்ளடங்கலாக அனைத்துத் தரப்பினரும் தொடர்ந்து ஆதரவை வழங்கி வருகின்றனர்.

இன்றைய தினம் செவ்வாய்க்கிழமை 38 வது நாளாக முன்னெடுக்கப்படும் போராட்டத்திற்கு மன்னார் மாவட்ட சிகை அலங்கரிப்பாளர்கள் சங்கம் முழுமையாக கடைகளை மூடி ஆதரவு வழங்கி போராட்டத்தில் பங்கேற்றனர்.

மேலும் காலி முகத்திடல் போராட்டத்தை முன்னின்று நடத்திய அருட்தந்தை ஜீவந்த பீரிஸ், காலி முகத்திடல் அறகலய குழுவினர், பௌத்த மதகுரு ஆகியோர் கொழும்பில் இருந்து வருகை தந்து தமது ஆதரவை தெரிவித்தனர்.

இதன் போது கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அருட்தந்தை ஜீவந்த பீரிஸ் குறிப்பிட்டவை வருமாறு:-

மன்னாரில் காற்றாலைக்கு எதிரான போராட்டம் 38 வது நாளாக தொடர்கின்றது. மக்களின் போராட்டத்திற்கு நீதி கிடைக்க வேண்டும்.

ஜனாதிபதி காற்றாலைக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். மக்களின் போராட்டத்திற்கு நீதி கிடைக்காது விட்டால் எதிர்வரும் 19 ஆம் திகதி மாலை 2 மணிக்கு ஜனாதிபதி செயலகம் முன் போராட்டத்தை நடத்துவோம். - என அவர் மேலும் தெரிவித்தார்.











# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## முழுமையாகவே...

அத்தோடு சகல தரப்பினரையும் உள்ளடக்கிய அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு மற்றும் நியாயமான நல்லிணக்க செயன்முறை என்பன நிலையான அமைதிக்கு வழிகோலும் எனவும் இந்தியா தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடர் நேற்றுத் திங்கட்கிழமை ஜெனீவாவில் ஆரம்பமானது. நேற்றைய தொடக்க அமர்வில் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க்கினால் சமர்ப்பிக்கப்பட்ட இலங்கை தொடர்பான அறிக்கை மீதான விவாதத்தில் கருத்துரைத்த இந்தியப் பிரதிநிதி, 2009 ஆம் ஆண்டு இலங்கையில் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதன் பின்னர் நாட்டைக் மீளக்கட்டியெழுப்புவதற்கும், மக்களை மீள்குடியமர்த்துவதற்கும் இந்தியா தொடர்ந்து ஆதரவு வழங்கி வந்ததாகச் சுட்டிக்காட்டினார்.

ஜெனிவாவுக்கான இந்தியாவின் நிரந்தரத் தூதரகத்தின் முதனிலைச் செயலாளர் அனுபமா சிங் இந்த உரையை ஆற்றினார்.இந்தியப் பிரதிநிதி ஆற்றிய உரையின் விவரம் வருமாறு:-

உயர் ஸ்தானிகரின் அறிக்கையை நாங்கள் கவனத்தில் கொண்டுள்ளோம்.

இலங்கையின் நெருங்கிய நண்பராகவும், அதனுடன் ஆழமான உறவுகளைக் கொண்ட உடனடி அண்டை நாடாகவும், 2009 முதல் இலங்கையில் நிவாரணம், மறுவாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும் மறுகட்டமைப்பு செயல்முறைக்கு இந்தியா தனது ஆதரவில் உறுதியாக உள்ளது.

இந்தியாவும் இலங்கையும் ஆழமான வரலாற்று, கலாசார மற்றும் நாகரிக உறவுகளைப் பகிர்ந்து கொள்கின்றன. இன்று, இந்த பிணைப்புகள் வலுவான, பல பரிமாணக் கூட்டாண்மையாக உருவாகியுள்ளன. இந்தியாவின் 'அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை' கொள்கையிலும் 'தொலைநோக்கு மகாசாகர்' பிராந்தியங்கள் முழுவதும் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சிக்கான பரஸ்பர மற்றும் முழுமையான முன்னேற்றம்) கொள்கையிலும் இலங்கை ஒரு சிறப்பு இடத்தைப் பிடித்துள்ளது.

2022 ஆம் ஆண்டில் முன்னோடியில்லாத பொருளாதார நெருக்கடிக்குப் பிறகு இலங்கையின் பொருளாதார மீட்சி மற்றும் நீண்டகால ஸ்திரத்தன்மையை உறுதி செய்வதற்கு இந்தியா முக்கிய நிதி மற்றும் தொழில்நுட்ப ஆதரவை வழங்கியது. ஏப்ரல் 2025 இல் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை வருகையும், டிசம்பர் 2024 இல் இலங்கை ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவின் இந்திய அரசு முறைப் பயணமும் நமது இருதரப்பு உறவுகளில் குறிப்பிடத்தக்க மைல்கற்களாகும்.

இலங்கையின் ஒட்டுமொத்த ஒற்றுமை, பிராந்திய ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மைக்குள் - சமத்துவம், நீதி, கண்ணியம் மற்றும் அமைதிக்கான தமிழ் சமூகத்தின் அபிலாஷைகளை ஆதரிப்பதே இந்தியாவின் அணுகுமுறையாக எப்போதும் இருந்து வருகிறது. இது சம்பந்தமாக, இலங்கை அரசமைப்பை முழுமையாகவும் திறம்படவும் செயல்படுத்துதல், மாகாண சபைத் தேர்தல்களை விரைவாக நடத்துதல் மற்றும் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு ஆகியவற்றிற்கு இந்தியா தொடர்ந்து மாறாமல் அழைப்பு விடுத்துள்ளது.

(சகல தரப்புகளையும்) உள்ளடக்கும் அணுகுமுறை மூலமான அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வும் உண்மையான நல்லிணக்கமும், தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கும் நீடித்த அமைதிக்கும் பங்களிக்கும் என்று இந்தியா நம்புகிறது.

இந்தத் துறைகளில் முன்னேற்றம் இலங்கையில் உள்ள அனைத்து சமூகங்களுக்கும் பயனளிப்பது மட்டுமல்லாமல், நமது இரு நாடுகளுக்கும் இடையிலான நட்பு மற்றும் நம்பிக்கையின் வலுவான அடித்தளத்தை வலுப்படுத்தும்.

- என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இந்தியா நேற்றுத் தெரிவித்தது.

---

## மனிதப் புதைகுழிகளின்...

ஐ.நா. மனித உரிமைகள் பேரவை உயர் ஸ்தானிகரின் அண்மைய இலங்கை விஜயம் மற்றும் அறிக்கைக்கு பிரித்தானியா தனது அறிக்கையில் தனது நன்றியை தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில், மனித உரிமைகள் மற்றும் பொறுப்புக்கூறல் குறித்த அரசாங்கத்தின் உறுதிப்பாடுகளை வரவேற்கும் அதேவேளை உறுதியான மற்றும் நிலையான முன்னேற்றத்தின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்துவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

"தன்னிச்சையான தடுப்புக்காவல், காவலில் வைக்கப்பட்டோரின் மரணங்கள், மனித உரிமை பாதுகாவலர்களை அச்சுறுத்துதல் மற்றும் சிறுபான்மை சமூகங்களை குறிவைத்தல் ஆகியவை குறித்த உயர் ஸ்தானிகரின் தொடர்ச்சியான கவலைகளை நாங்கள் பகிர்ந்து கொள்கிறோம்.

"பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் போன்ற சட்டங்களை ஒழிக்க பொதுமக்களுக்கு உறுதிமொழிகள் வழங்கப்பட்டுள்ள போதிலும், அடிப்படை சுதந்திரங்களை கட்டுப்படுத்த தொடர்ந்து அந்த சட்டத்தை பயன்படுத்துவது குறித்து நாங்கள் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளோம்.

"இழப்பீடுகள் மற்றும் காணாமல் போனவர்களை மையமாகக் கொண்ட உள்நாட்டு நிறுவனங்களின் பணிகளை மீண்டும் ஊக்குவிக்கவும் நாங்கள் அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம்.

எந்தவொரு நல்லிணக்கமும் பொறுப்புக்கூறல் செயல்முறையும் உள்ளடக்கியதாகவும் விரிவானதாகவும் இருப்பது, பாதிக்கப்பட்ட சமூகங்களின் ஆதரவைக் கொண்டிருப்பது, கடந்தகால பரிந்துரைகளை உருவாக்குவது மற்றும் சர்வதேச தரங்களை பூர்த்தி செய்வது மிகவும் முக்கியமாகும்." - என்று பிரிட்டன் தெரிவித்துள்ளது.

அதேநேரம் மோதல் தொடர்பான பாலியல் வன்முறை குறித்த உங்கள் அலுவலகத்தின் முக்கியமான பணியை முன்னெடுத்துச் செல்லவும் ஐ.நா மனித உரிமைப் பேரவையின் உயர் ஸ்தானிகரிடம் பிரித்தானியா கோரியுள்ளது.

மேலும் இந்தப் பிரச்சினை இலங்கையில் முன்னுரிமைப் பிரச்சினையாகக் கவனிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துவதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரச்சினைகளில் இலங்கை அரசாங்கத்துடன் திறம்பட ஈடுபடுவதற்கான தனது விருப்பத்தை மீண்டும் உறுதிப்படுத்துவதாக பிரித்தானியா தனது அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளது.

இதற்கிடையில், கனடா, மலாவி, மொண்டெனேகுரோ, வடக்கு மாசிடோனியா மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளின் முக்கிய குழுவும் நேற்று ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கையின் மனித உரிமைகள் நிலைமை குறித்து ஓர் அறிக்கையை வெளியிட்டது.

ஐ.நா.வுக்கான பிரித்தானியாவின் நிரந்தர பிரதிநிதி குமார் அய்யர் தொடர்புடைய அறிக்கையை வெளியிட்டார். மேலும் வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத்தின் வருகைக்கும் அவர் நன்றி தெரிவித்தார்.

மனித உரிமைகள், பொறுப்புக்கூறல், நல்லிணக்கம், நல்லாட்சி மற்றும் அரசமைப்பு சீர்திருத்தம் ஆகியவற்றிற்கான அதன் உறுதிப்பாட்டை அர்த்தமுள்ள நடவடிக்கையாக மாற்ற இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்க விரும்புவதாகவும் அவர் கூறினார்.

---

## முன்னாள் ஜனாதிபதிகளின்...

விதிகளுக்கும் முரணானது அல்ல என உயர் நீதிமன்றம் வியாக்கியானம் அளித்துள்ளது.

நாடாளுமன்றத்தின் இன்றைய அமர்வின் ஆரம்பித்தில் சபாநாயகர் வைத்தியர் ஜகத் விக்ரமரத்ன உயர் நீதிமன்றத்தின் இந்த வியாக்கியானத்தை அறிவித்தார்.

இதன்படி குறித்த சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றி சட்டமாக்க முடியும் என்றும் உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளதாக சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சட்டமூலத்தை நாளை நண்பகல் 11.30 முதல் பிற்பகல் 3.30 மணி வரை விவாதத்துக்கு எடுக்க இன்று காலை கூடிய நாடாளுமன்ற அலுவல்கள் குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# காணாமல்போனோருக்கான அலுவலகத்தினர் திரும்பவும் சோமரத்னவைச் சந்திப்பரா?

மாணவி கிருஷாந்தி குமாரசாமி படுகொலை வழக்கின் மரண தண்டனைக் கைதியாக உள்ள சோமரத்ன ராஜபகக்ஷவை காணாமல் போனவர்கள் தொடர்பான அலுவலகம் மீண்டும் சந்திப்பது குறித்து கலந்துரையாடப்படுகிறது. ஏற்கனவே அவரைச் சந்தித்து கலந்துரையாடியுள்ள நிலையில் மீண்டும் அவரை சந்திப்பதற்கான தேவைகள் குறித்து ஆராயப்படுவதாக காணாமல் போனவர்கள் தொடர்பான அலுவலத்தின் தலைவர் மகேஷ் கட்டுலந்த தெரிவித்தார்.



சோமரத்ன ராஜபக்ஷவை சிறைச்சாலைக்கு சென்று சந்தித்த காணாமல்போனோர் தொடர்பான அலுவலகத்தினர் பல்வேறு விடயங்களைக் கேட்டறிந்து கொண்டனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

எனினும், குறித்த சாட்சியங்களுடன் அடுத்தக்கட்ட நடவடிக்கையை முன்னெடுப்பதா? அல்லது அவரை மீண்டும் சந்திப்பதா? என்பது குறித்து கலந்துரையாடுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த நிலையில், அவரை மீண்டும் சந்திப்பதற்கான எவ்வித இறுதித் தீர்வும் இதுவரை எடுக்கப்படவில்லை என்றும் காணாமல் போனவர்கள் தொடர்பான அலுவலத்தின் தலைவர் மகேஸ் கட்டுலந்த கூறினார்.

# ஏறாவூரில் ஓட்டுபள்ளிவாசல் பின்பகுதிக் காணியில் இன்று ஆயுதங்களைத் தேடிய அகழ்வில் 4 கைக்குண்டுகள் மீட்பு!





(திருக்கோவில் நிருபர்)

மட்டக்களப்பு ஓட்டுபள்ளிவாசல் பின்பகுதியல் உள்ள பழைய பாடசாலை காணியில் புதைக்கப்பட்டிருக்கு ஆயுதங்களளை தேடி இன்று செவ்வாய்க்கிழமை இராணுவப் புலனாய்வுப் பிரிவினர், விசேட அதிரடிப்படையினர், பொலிஸாருடன் இணைந்து அகழ்வு பணியை மேற்கொண்டதில் 4 கைக்குண்டுகளை மீட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலன்னறுவை இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம் ஏறாவூர் ஓட்டுபள்ளிவாசல் குறுக்கு வீதியில் பள்ளிவாசலுக்கு பின்பகுதியில் உள்ள முன்னாள் அகமட் பரீட் வித்தியாலய பகுதியில் அகழ்வதற்கான நீதிமன்ற உத்தரவை பெற்று, இன்று செவ்வாய்க்கிழமை ஏறாவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரசாத் லியனகே தலைமையில் விசேட அதிரடிப்படையினர், இராணுவ புலனாய்வு பிரிவினர் இணைந்து பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் அகழ்வு பணி இடம்பெற்றது.

இதன்போது அங்கு ஒரு பிளாஸ்ரிக் வாளியில் பொதி செய்யப்பட்டு புதைக்கப்பட்ட நிலையில் ஜே.ஆர் ரக 4 கைக்குண்டுகளை அவர்கள் மீட்டனர். இவ்வாறு புதைக்கப்பட்ட வாளி ஜுஸ் கலவை பொதி செய்யப்பட்ட வாளி எனவும், இந்த ஜுஸ் கலவை 2012 உற்பத்தி செய்யப்பட்டதாகவும், 2014 அதன் காலவதி திகதி எனக் குறிப்பிடப்பட்டிருந்ததாகவும் கூறப்பட்டது. அதன்படி 2012க்கும் 2020க்கும் இடைப்பட்ட காலத்தில் நிலத்தில் பாதுகாப்பாக இது புதைக்கப்ட்டிருப்பதாக பொலிஸார் கருதுகின்றனர்.

இதனைத் தொடரந்து அகழ்வு பணி நிறுத்தப்பட்டதுடன் மீட்கப்பட்ட கைக்குண்டுகளை விசேட அதிரடிப்படையின் கொண்டு சென்று சோதனையின் பின்னர் அதனை பாவிக்கமுடியுமா அல்லது அழிக்க வேண்டுமா என்பதைத் தீர்மானித்த பின்னர் அது தொடர்பாக நீதிமன்றிற்கு அறிக்கை சமர்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகினன்றனர்.

## யாழ். கலட்டிச் சந்தியில் வாள் வெட்டுச் சம்மவம்

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கலட்டிச் சந்தியில் இன்று செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்ற வாள்வெட்டு தாக்குதலில் இளைஞன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

ஹைஹயேஸ் ரக வாகனத்தில் வந்த கும்பல் ஒன்று, மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞன் ஒருவனை மோதி விழுத்திவிட்டு, அந்த இளைஞன் மீது வாள்வெட்டுத் தாக்குதலை நடாத்திவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றது.

இந்நிலையில் கோண்டாவில் பகுதியைச் சேர்ந்த இளைஞன் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

## பலப்பிட்டியவில் சூட்டுச் சம்பவம்

காலி, பலப்பிட்டிய, பெட்டிவத்த பிரதேசத்தில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளதாக அம்பலாங்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் சென்ற இனற்தெரியாத இருவர் ஓட்டோவில் பயணித்துக்கொண்டிருந்த நபரொருவரை இலக்கு வைத்து துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

# ராஜிதவுக்குப் பிணை!

கிரிந்த மீன்பிடி துறைமுகத்தில் மணல் அகழ்வுத் திட்டத்தின் மூலம் அரசு நிதியை முறைகேடாகப் பயன்படுத்தினார் எனக் கூறப்படும் வழக்கில் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் மீன்வள அமைச்சர் ராஜித சேனாரத்ன பிணையில் விடுவிக்கப் பட்டார்.

கொழும்பு பிரதம நீதிவான் அசங்க எஸ். போதரகம, ரூ. 50,000 ரொக்கப் பிணையிலும் தலா 2 மில்லியன் ரூபா மதிப்புள்ள மூன்று பிணைகளிலும் அவரை விடுவிக்க அனுமதி வழங்கி னார். சேனாரத்னவுக்கு வெளிநாட் டுப் பயணத் தடையையும் நீதவான் விதித்தார்.





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## கொழும்பின் தந்திரோபாயம்

இலங்கையில் யுத்த காலத்தில் தமிழர் தேசத்துக்கு எதிராக இழைக்கப்பட்ட யுத்த குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், அடிப்படை மனித உரிமை மீறல்கள், இனவழிப்பு நடவடிக்கைகள் போன்றவை தொடர்பில் நீதி நிலைநாட்டடபடவில்லை. உண்மைகள் கண்டறியப்பட்டு வெளிப்படுத்தப்படவில்லை. பொறுப்புக் கூறல் நடைமுறைப்படுத்தப்படவில்லை. குற்றம் இழைத்தோர் சட்டத்தின் முன் நிறுத்தப்படவில்லை.

இது குறித்தே ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் தொடர்ந்து குரல் எழுப்பி வருகிறது.

யுத்தம் முடிந்து 16 ஆண்டுகள் கடந்து விட்டன. இந்த 16 ஆண்டுகளிலும் ஐந்தாவது ஆட்சித் தலைவர் அதிகாரத்துக்கு வந்து விட்டார். மாறி மாறி அரசுகள் அதிகாரத்துக்கு வந்து போன படி இருக்கின்றன. மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன, கோட்டாபய ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்க என்ற வரிசையில் இப்போதும் ஐந்தாவது நிறைவேற்றதிகார ஜனாதிபதியாக அநுரகுமார திஸநாயக்க பதவியில் இருக்கின்றார். அதேபோல நான்கு அரசாங்கங்களும் மாறிவிட்டன.

யுத்த காலத்தில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரங்கள், குற்றங்கள், மீறல்கள், இனவழிப்பு நடவடிக்கைகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்காமல் தப்புவதற்கு முன்னர் இருந்த அரசுத் தலைவர்கள் மீதும், அரசாங்கங்கள் மீது குற்றத்தை சுமத்தி, காலத்தை இழுத்தடித்துத் தப்பிக் கொள்வது கொழும்பின் பண்பியல்பாக - பழக்கமாக - இருந்து வருகிறது.

மைத்திரிபால சிறிசேன ஆட்சிக்கு வந்ததும் மஹிந்த ராஜபக்ஷவைக் குற்றம் சொன்னார். தொடர்ந்து கோட்டா வந்ததும் மைத்திரி அரசு மீது குற்றம் சொன்னார். அதன் பின்னர் வந்த ரணிலும் அதே பழக்கத்தைப் பின்பற்றினார். இப்போது அநுரகுமார திஸநாயக்கா அதிகாரத்துக்கு வந்ததும் முன்னர் இருந்த நான்கு ஜனாதிபதிகளையும், அரசுகளையும் வரிசையாகக் குற்றம் சொல்லுகிறார். தாமும் தமது அரசும் ஏதோ நியாயம் செய்வார்கள், ஆகவே வாய மூடிக் கொண்டிருங்கள் என்று சர்வதேச சமூகத்துக்கு உபதேசம் செய்கிறார். இன்னும் நான்கு வருடங்கள் கழித்து புதிதாக வருகின்ற ஜனாதிபதியும் அரசாங்கமும் இதற்கு முன் இருந்த இந்த ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் குறை சொல்லி மீண்டும் காலத்தை இழுத்தடிப்பார்கள். இதுதான் கொழும்பின் தந்திரோபாயமாக நீடிக்கிறது.

ஊடகவியலாளர் நிமலராஜன் படுகொலை தொடர்பாக நேற்று கொழும்பில் நடந்த நிகழ்வில் உரையாற்றிய தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் ஒரு விடயத்தை அங்கு சுட்டிக் காட்டினார்.

யுத்தத்தில் பாதிக்கப்பட்ட தரப்புகளுக்கு நீதி வழங்கும் விடயத்தில் அரசுத் தலைவர்கள் அதிகார எஜமானர்களாக மாறினாலும், அரசாங்கக் கட்டமைப்பில் அதிகார வர்க்கம் மாறப்போவதில்லை. அந்த அதிகார வர்க்கம்தான் இந்தக் குற்றங்கள். கொடூரங்கள், உரிமை மீறல்கள், இனவழிப்பு போன்ற விடயங்களில் நேரடியாக சம்பந்தப்பட்டது. அரசாங்கத்துக்கு மாறி மாறித் தலைவர்களாக வருகின்ற அரசியல் எஜமானர்கள் என்ன முடிவெடுத்தாலும், இந்த அரசாங்கக் கட்டமைப்பின் அதிகார வர்க்கம் அதற்கு இடம் கொடுக்காமல் முரண்டு பிடிக்கும். அதுதான் இலங்கையில் நடக்கின்றது. அதை மீறி நடவடிக்கை எடுக்க வைக்கும் அரசியல் திராணி அரசியல் தலைமைகளுக்கு இல்லை என்பதுதான் குறைபாடு. ஆயினும் அந்தக் குறைபாட்டை நிவர்த்திப்போம் என்று கூறி அதிகாரத்துக்கு வந்த அரசியல் தலைமைகளை மேற்படி அரசாங்கக் கட்டமைப்பின் அதிகார வர்க்கங்களை மீறி நடவடிக்கை எடுக்க வைப்பதில்தான் நமது வெற்றி தங்கி உள்ளது என்ற சாரப்பட சுமந்திரன் கருத்துத் தெரிவித்திருந்தார்.

படைத் தரப்பிலும், பாதுகாப்பு தரப்பிலும், அதிகார வர்க்கத்திலும், அரசாங்கக் கட்டமைப்பின் மேல் மட்டத்திலும் கோலோச்சிக் கொண்டிருக்கும் இந்த அரூபக் கரங்களை மீறி, நீதியை நிலைநாட்ட அரசுத் தலைவர் தயாரா என்பதுதான் கேள்வி. அதற்குரிய திராணி இப்போதைய அரசுத் தலைவருக்கும் இருப்பதாகத் தெரியவில்லை என்பதுதான் கள யதார்த்தம்.

# வாழ்வது ஒருமுறை வாழ்த்தட்டும் தலைமுறை!

**உலக தற்கொலை தடுப்பு தினம் செப்ரெம்பர்– 10 ஆகும். அதனை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.**



நடராசா கோபிராம்,
(உளவியல்சிறப்புக்கலை மாணவன்,
யாழ்.பல்கலைக்கழகம்)

அரிது அரிது மானிடராய் பிறப்பது அரிது என ஔவையார் மனிதரின் பிறப்பு பற்றியும், வாழ்க்கை பற்றியும் கூறுகிறார். எத்தனை உயிரினங்கள் இருந்தாலும் கூட மனிதப் பிறப்பு அற்புதமானது. மனித வாழ்க்கை இறைவனால் கட்டமைக்கப்படுவதுடன், மனிதவாழ்வில் பிறப்பு–இறப்பு என இரண்டுக்கும் இடைப்பட்ட ஒரு அழகிய வாழ்க்கை காணப்படுகிறது. சுவாரஸ்யமான மனித வாழ்க்கையின் இறுதியில் மனிதன் இயற்கையாக இறக்கும் போது, “இயற்கை எய்தினான், இறைவனடி சேர்ந்தார், காலமாகினார், ஆத்மசாந்தி அடைந்தார்” எனக் கூறுவார்கள்.

மனிதன் இயற்கைக்கு அடுத்து ஒரு முழுமையான வாழ்க்கையை வாழ முடியாமல் ஏதோ ஒரு காரணத்தால் வாழ்க்கையை முடித்துக்கொண்டால் அதனை “செயற்கை மரணம் அல்லது துர்மரணம்” என முன்னோர்கள் கூறுவதுடன் ஆன்மா சாந்தியடையாது எனவும் கூறுவார்கள். இவ்வாறான துர்மரணமாக தற்கொலை காணப்படுகிறது.

தற்கொலை என்பது நம்மை நாமே கொலை செய்து கொள்வதாக காணப்படுகிறது. பொதுவாக சமயங்கள் தற்கொலையை இறை நம்பிக்கைக்கு எதிரானது என கூறுகின்றது.

நாளை (செப்ரெம்பர் 10) உலக தற்கொலை தடுப்பு நாளாகும். இந்நாளை 2003 ஆம் ஆண்டில் இருந்து பிரகடனப்படுத்தப்படுவதுடன் அனைவரும் கட்டாயம் தெரிந்திருக்க வேண்டிய நாளாகவும் காணப்படுகிறது. ஏனெனில் இன்றளவு எமது நாட்டில் மட்டுமல்ல, உலகம் எதிர்நோக்கும் ஓர் முக்கிய பொதுச்சுகாதாரப் பிரச்சினையாக தற்கொலை விளங்குகிறது. காலங்காலமாக செய்தித்தாள், சமூகவலைத்தளங்கள் போன்றவற்றிலும் நாள்தோறும் வரும் ஒரு துயரகரமான செய்தியாகவே காணப்படுகின்றது. மரணம் சோகமானது தான். அதிலும் தற்கொலை மிகுந்த சோகத்தை தருகின்றது. இது குறித்த நபரை மட்டுமல்லாது, சுற்றியுள்ளவர்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது.



உலகளாவியரீதியில் தற்கொலை இன்னும் முற்றாகக் கட்டுப்படுத்தப்படாததும், அதேவேளை மிகச்சரியாக எதிர்வு கூறப்படாததுமான பிரச்சினையாகவே காணப்படுகின்றது. உலக சுகாதார ஸ்தாபனத்தின் (றுர்மு) தற்போதைய ஆய்வுகளின்படி, வருடத்துக்கு 8 லட்சத்துக்கும் அதிகமானோர் தற்கொலை செய்கின்றனர். அதாவது 40 செக்கனுக்கு ஒரு நபர் என்ற ரீதியில் இடம்பெறுகின்றது. குறிப்பாக 15–29 வயதுப் பிரிவினர் அதிகளவில் இறப்பதற்கு தற்கொலையே பிரதான காரணமாக விளங்குகின்றது. 15–44 வயதுவரை 55 வீதமானவர்களும், 45 வயதின்மேல் 45 வீதமானோரும் இறப்பதாக அமெரிக்க நோய்தடுப்பு மையம் கூறுகின்றது. பெண்களைவிட 2 மடங்குக்கும் மேல் ஆண்கள் தற்கொலை செய்வதுடன், தற்கொலைக்கான முயற்சியில் பெண்களே அதிகமாக ஈடுபடுகின்றனர். தற்கொலை செய்தல் என்பது ஒருவன் தன் உயிரை மாய்க்கும் பொருட்டு திட்டம் தீட்டி, திட்டத்தினை நடைமுறைப்படுத்தி தனது உயிரை மாய்த்துக்கொள்ளல் ஆகும். தற்கொலைக்கான திட்டத்தினை தீட்டி அதனை நடைமுறைப்படுத்தும் போது தடுக்கப்பட்டு அல்லது சிகிச்சையின் பின் காணப்படின் அதனை ‘தற்கொலை முயற்சி’ என

தொடர்ச்சி▼

## உலக தற்கொலை தடுப்பு தினம்!

“ஒளியை நோக்கி – ஒரு உயிர்காக்கும் ஓசை”

ஓர் உள் அழுகையில் உருகும் மனதுக்குள்,
ஒளி தேடி விழியும் ஒரு பார்வை இருக்கும்.
அழுகையை வீழ்ச்சி எனக் கருதாதே நண்பா,
அது உயிர் காத்து பறக்கும் பறவை என நம்பு!

நீ சொல்வதெல்லாம் ஒளி தான்
ஒரு வார்த்தை போதும்
ஒரு உயிர் மீளும்!
“நான் உன்னோட இருக்கேன்”
என்ற ஒரு வார்த்தை,
ஒரு உயிரின் மரணம்
தடுக்கக் கூடும்!

தனிமை ஒரு நிழல்,
அதற்குள் நம்மால்
ஒளி ஏற்படுத்த முடியும்
உலக தற்கொலை தடுப்பு தினம்
அநேக இதயங்களின் தினம்!

வாழ்க்கை – இது ஒரு வாய்ப்பு,
வெற்றி இல்லை என்றாலும்,
வாழும் முயற்சி போதும்!

**நடராசா கோபிராம்,
உளவியல் சிறப்புக்கலை மாணவன்,
யாழ்.பல்கலைக்கழகம்.**

# வாழ்வது ஒருமுறை வாழ்த்தட்டும் தலைமுறை!

தொடர்ச்சி▲

லாம். ஒருவர் தற்கொலை செய்து இறக்கும் நேரத்தில் 10-15 மனிதர்கள் தற்கொலைக்கு முயற்சிப்பதுடன் 100 இற்கும் அதிகமானவர்கள் அதனைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருப்பதாக ஆராய்ச்சிகள் கூறுகின்றன. நமது நாட்டிலும்கூட ஒருவருடத்தில் சுமார் 3000 பேர் அதாவது ஒரு நாளுக்கு 8 அல்லது 9 பேர் சராசரியாக தற்கொலை செய்கின்றனர் என்று ஆராய்ச்சிகள் கூறுகின்றன.

தற்கொலை மதம், இனம், மொழி, நாடு என இல்லாது மனிதர்களால் தனித்துவமாக செய்வதாக காணப்படுகிறது. ஏனெனில் பொதுவாக மனிதன் தவிர்ந்த ஏனைய உயிரினங்கள் தற்கொலை செய்வதில்லை. கொலைகள் மற்றும் போர்கள் மூலம் ஏற்படும் உயிரிழப்பை விட அதிகமாகவே உலக அரங்கில் பல்வேறு முறைகளில் தற்கொலைகள் இடம்பெற்று வருகின்றன.

என்ன காரணங்களின் அடிப்படையில் மனிதர்கள் தற்கொலை செய்கிறார்கள் என பார்த்தோமாயின் இவற்றுக்கும் பல்வேறு காரணங்கள் வழிவகுக்கின்றன. மனச்சோர்வு, பொருளாதார பிரச்சினை, காதல் தோல்வி, குடும்பப் பிரச்சினை, பாலியல் ,யலாமை, விவாகரத்து, சமூக ஊடகங்களின் தவறான செயற்பாடு, பரீட்சைத் தோல்வி, வேலையின்மை, தீராத நோய்கள், உளவியல் சார் பிரச்சினைகள், போதைப் பொருள் பாவனை எனப் பல காரணங்களை நாம் அடுக்கிக்கொண்டே போகலாம்.

### மனச்சோர்வு

மனச்சோர்வு என்பது பொதுவாக நாம் ஒரு பிரச்சினையிலிருந்து மீண்டெழ முடியாத நிலையாக காணப்படுகிறது. ஒரு பிரச்சினையின் போது நாம் '3F' என்ற முறையை பயன்படுத்துவோம். 3F (Fly - விலகிச்செல்லல், Fight - போராடல், Freeze - தேங்கி நிற்றல்).

இதில் Fly, Fight என்பன ஒரு குறிப்பிட்ட பிரச்சினையிலிருந்து விடுபட ஆரோக்கியமானதாகவும், அந்த இடத்தில் தேங்கி நிற்பது (Freeze) மனஅழுத்தத்தை (Stress) ஏற்படுத்தி மனச்சோர்வுக்கு (Depression) இட்டுச்செல்லும். தற்கொலை இறப்புக்களில் 90 வீதமானவை மனச்சோர்வாலேயே நிகழ்கின்றன என்று ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. வேலையின்மை, அழுத்தங்கள், குற்ற உணர்ச்சி, தாழ்வு மனப்பான்மை என பல்வேறுபட்ட காரணங்களின் அடிப்படையில் ஏற்படும் மனச்சோர்வு நிலைமூலமும் அதன் மூலம் உருவாகும் எதிரான எண்ணங்களும் (Negative Thougths) மூலமும் தற்கொலை செய்ய தூண்டுவதாக விளங்குகின்றன.

### பொருளாதாரப் பிரச்சினை

கொரோனாவின் பின் ஏற்பட்ட பொருளாதார சரிவுநிலை எமது நாட்டில் மட்டுமல்லாது உலகளாவிய ரீதியில் பொருள்களின் விலை அதிகரிப்பு, அடிப்படை பொருள்களின் தட்டுப்பாடு, கடன் பிரச்சினைகள் மற்றும் வேலையில்லா நிலைமைகள் ஏற்பட்டன. அத்துடன் பணி நீக்கம் மற்றும் வீட்டினுள் முடக்கப்பட்ட "Work from home" வேலை அழுத்தங்கள் மக்களுக்கு உடல், உள ஆரோக்கியத்தை கெடுத்து வாழ்க்கையில் உறுதியற்ற தன்மையையும் ஏற்படுத்தின.

### போதைப்பொருள் பாவனை

இன்று உலகளாவிய ரீதியில் முக்கிய பிரச்சினையாக காணப்படும் போதைப் பொருள் பாவனை நமது நாட்டிலும் தற்காலங்களில் அதிகளவில் பயன்படுத்தப்பட்டு வருவது நாம் அறிந்ததே. உணர்ச்சிரீதியாக நாம் கவலையிலுள்ள போது அதிக கவலையையும், சந்தோசத்திலுள்ள போது அதிக சந்தோசத்தையும் ஏற்படுத்தவல்ல இது சுய அறிவு, தன்னிலை தெரியாது ஒருவர் செயற்படவும், சமூகவிரோத செயல்கள் செய்யவும் காரணமாகின்றது. அதுமட்டுமல்லாது துஸ்பிரயோகங்கள், கொலை, கொள்ளை போன்ற சமூக எதிர்செயற்பாடுகளில் ஈடுபடவைத்து அழுத்தங்களுக்கு உள்ளாகி தற்கொலை செய்யவும் வழிவகுக்கின்றது.

### சமூக வலைத்தளங்கள் ஊடகங்களின் தவறான செயற்பாடுகள்

தற்கொலைசார் செய்திகள், அது எப்படி நடந்தது, எங்கே இறந்தார் என்பதை மீண்டும் மீண்டும் குறிப்பிட்ட ஒன்றையே குழஉரள பண்ணி (முன்னிலைப்படுத்தி) காட்டுவதன் மூலம் மாணவர்களின் மனநிலை பாதிப்படையும். அதாவது, "இறுதி தற்கொலை தான்" என்ற எண்ணம் ஏற்பட்டு தற்கொலை செய்ய ஓர் உந்துசக்தியாக விளங்குகின்றது.

### மனநலப் பிரச்சனைகள்

மனச்சோர்வு உட்பட எண்ணச்சுழற்சி நோய் (OCD), இரு துருவக்கோளாறு (Bipolor), மனச்சிதைவுநோய் (Schizophernia), இல்பொருள்காட்சி (allucination) முதலான மனநிலை நோய்கள் மனிதர்களில் அதீத சந்தேகம், தனிமையை ஏற்படுத்தி தற்கொலை எண்ணம் அடிக்கடி ஏற்பட்டு தற்கொலை செய்ய இவை அத்தியாவசியமாகின்றன.

### காதல் தோல்வி

பொதுவாக எல்லோரும் இளவயதினர் இறந்துவிட்டாலே காதல் பிரச்சினை என பேசத் தொடங்கிவிடுவார்கள். ஆனால் இது பிரதான காரணம் அன்று. இது தற்கொலை ஏற்பட ஒரு காரணமாக காணப்படுகின்றது. காதலில் ஏமாற்றம், பிரிவு, புரிந்துணர்வின்மை, சந்தேகம் என்பன குறிப்பிட்ட ஆணையோ, பெண்ணையோ தன்னைத்தானே அழிக்கச் செய்கின்றது.

### குடும்பம் மற்றும் உறவு பிரச்சினைகள்

குடும்பத்தில் ஏற்படும் சிறு பிரச்சினைக்காக நான் சாகப் போகின்றேன் எனக்கூறி, இறந்த சம்பவங்கள் நாம் அறிந்ததே. குடும்பத்தில் ஏற்படும் சண்டைகள், மனக்கசப்புக்கள், விரோதம் என்பன உச்சமடைந்து தற்கொலை செய்யவும் காரணமாகின்றது. கணவன்-மனைவி உறவுநிலை அதாவது, புரிந்துணர்வின்மை மிகப்பெரிய காரணமாகின்றது. நல்ல சீரான நட்புவட்டாரங்கள், சமூக குழுக்கள் காணப்படாமையும், அதனால் ஏற்படும் தனிமை மற்றும் சிக்கல்கள் தற்கொலை செய்ய தூண்டுகின்றன.

### தொழில்நுட்ப சாதன ஆளுகை

பொழுதுபோக்கு மற்றும் தொடர்பாடல் சாதனங்கள் நவீன வளர்ச்சியில் அதீத வளர்ச்சி அடைந்தாலும் கூட மனிதனுக்கு நன்மையைவிட அதீக தீய தாக்கங்கள் ஏற்படுகின்றன. குறிப்பாக சினிமாவை எடுத்துக்கொண்டால் அதில் காட்டப்படும் தற்கொலை

தொடர்ச்சி▼

# வாழ்வது ஒருமுறை வாழ்த்தட்டும் தலைமுறை!

தொடர்ச்சி▲

சார் பாடல்கள், காட்சிகள் பரவலாகவும் முன்னிலைப்படுத்தி காட்டப்படுவதால் குழந்தைகள் இதனைப் பார்க்கும் போது "பிஞ்சு நெஞ்சில் நஞ்சை விதைப்பது" போன்றாகிவிடும். சிறுவயதில் இதனைப் பார்த்து இதுதான் இறுதி என நினைத்து அவர்களும் கற்றுக் கொள்கின்றார்கள். மனிதன் தொடுதிரைக்கு அடிமைப் பட்டவனாகி முடங்கிய நிலையில் இருக்கின்றான். மனிதன் இன்னொரு மனிதனுக்கு தொடர்பின்றி தொடுதிரைகள் மூலம் மட்டுப்படுத்தப்பட்ட தொடர்பாடல் ஏற்படவும், நிகழ்நிலை விளையாட்டுக்கள் மற்றும் பாதுகாப்பில்லாத தகவல்கள், புகைப்படங்கள் பகிர்வதன் மூலம் ஏற்படும் தாக்கங்களால் மனிதன் தன் உயிரை மாய்த்துக்கொள்கின்றான்.

## குழந்தைப்பருவம் முதல் தவறான அழுத்தங்கள்

பெற்றோர்கள் குழந்தைகள் சீரான முறையில் உரிய அன்பு, அரவணைப்பு இன்மை, பாதுகாப்பில்லாத முறையில் வளர்ப்பு மற்றும் முறையற்ற திணிப்புக்கள் அதாவது பெற்றோரின் விருப்பத்தின் பொருட்டு கல்வியை பிள்ளைகளில் திணித்தல் மற்றும் சமூக கட்டுப்பாடுகள் என்பன குழந்தையின் மனதில் பயம் ஏற்படுகின்றது. அதுமட்டுமன்றி குழந்தைகளுக்கு சிறுவயதிலேயே எதிர்பாலினம் மற்றும் அவர்கள் பற்றிய புரிதல்கள், பிரச்சினையால், சூழலுக்கேற்ப செயற்படுதல் என்பன கற்பிக்கப்படாதவிடத்து ஏற்படும் நிலை விரக்தி மற்றும் மனப்பக்குவமற்ற நிலையை உண்டாக்கி தற்கொலைக்கு அத்திவாரமிடுகின்றது.

இவ்வாறான பல்வேறுபட்ட காரணங்களின் அடிப்படையில் தற்கொலை எண்ணம் உண்டாகி தற்கொலை செய்கிறார்கள். தற்கொலை செய்பவர்களை நாம் பலவழிகளில் அடையாளம் கண்டுகொள்ள முடியும். உடல் உள நடத்தை ரீதியில் பலமாற்றங்களை கண்டுகொள்ளலாம். இதைப்பற்றி அதிகம் பேசுவார்கள் (பேசாமல் சாகலாம் போல, நான் இருந்து என்ன பயன்) உணவு மற்றும் உடை அதிகளவில் நாட்டமின்மை, தனிமையை விரும்பல், படிப்பில் நாட்டமின்மை, உடல்சோர்வு, வேலையில் தரம் குறைதல், பாலியல் விருப்பமின்மை, உணர்ச்சிவசப்படுதல், ஒதுங்கியிருத்தல், அடிக்கடி சோகம் முதலான பல்வேறுபட்ட அறிகுறிகள் மூலம் அவர்களை அடையாளம் காண முடியும்.

தற்கொலை காரணமாக பல விளைவுகளும், தாக்கங்களும் ஏற்படும் என்பது அனைவரும் அறிந்ததே. இது தனியே ஒருவரை பாதிப்பதில்லை, ஒரு சமூகத்தையே பாதிக்கின்றது. ஒரு தனிநபர் இறக்கும் போது அவருடன் நெருங்கிய தொடர்புடைய 6 நபர்களை பாதிப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன. வாழ்க்கையின் முடிவு என கருதி செய்யும் தற்கொலை அவர்களின் குடும்பம் மட்டுமன்றி பலரையும் பாதிப்பது நாம் அறிந்ததே. சமூக ஊடகங்களின் தவறான செய்திபரப்புதல் மூலம் அதிகம் பரப்பப்பட்டு ,தன்மூலம் பலர் தற்கொலைக்கு தூண்டுவதற்கும் மனப் பாதிப்புக்கள் உருவாகவும் வழிவகுக்கின்றது.

"சுயதீங்கு" என குறிப்பிடப்படும் இந்த தற்கொலையை நாம் எவ்வாறு தடுக்கலாம் அல்லது தீர்வு காணலாம் எனப் பார்க்கலாம்.

1. சீரான தொடர்பாடல் – தற்கொலை எண்ணம் உள்ளவரை நாம் அடையாளம் கண்டால் அவரை அழைத்து அவரின் பிரச்சினைகளை நாம் முழுமையாகக் கேட்கவேண்டும். நான் உன்னுடன் இருக்கிறேன். (I am here for you) என்ற நம்பிக்கையை அளித்தல் வேண்டும். அவர்களின் மனக் குமுறல்களை செவிசாய்த்து கேட்பதன் மூலம் தற்கொலையொன்றிலிருந்து மீள உதவியாக இருக்கும். பொய்யான நம்பிக்கையை நாம் வழங்கக்கூடாது. அவரை தனிமையில் விடாது நெருங்கியவர்கள் மற்றும் உறவினர்களுடன் தமது பிரச்சினைகள் மற்றும் கஸ்ரங்களை கூறுவதன் மூலம் குறித்த நிலையை கையாண்டு தற்கொலைக்கு தீர்வு காணலாம். அத்துடன் ஒவ்வொரு மனிதரும் சீரான நட்பு வட்டாரம் மற்றும் குடும்ப உறவுகள் அமைத்தலும் சீரான தொடர்பாடல் மூலமும் இதனை தடுக்கமுடியும்.

2. உளநல ஆலோசகரை நாடல் – உளவியல்சார் ஆலோசனை வழங்குவதன் மூலம் தற்கொலையை தடுக்க முடியும். உளவளதுணையாளரிடம் சேர்ப்பதன் மூலம் பிரச்சினையை இனங்கண்டு தீர்வு வழங்கவும் முடியும். அபிவிருத்தி அடைந்த நாடுகளில் உளவளத்துணை (Counselling) முக்கியமானதொன்றாக காணப்படுகிறது. ஆனால் எமது நாட்டில் இன்றும் அதற்கான பூரண அறிவு மக்களிடையே இல்லாமல் காணப்படுகிறது. இவ் உளவளத்துணையை சரியான முறையில் வழங்குவதன் மூலம் மனச்சோர்வைக் களைந்து தற்கொலை எண்ணத்தை நீக்கி மனிதனை சீராக வாழ ஆற்றுப்படுத்துகிறது.

3. ஆலோசனை மையங்களை நிறுவுதலும் வழிப்புணர்வு செயற்பாடுகளில் ஈடுபடலும் – ஆலோசனைகள் அறிவுரைகள் வழங்ககூடிய ஆலோசனை மையங்களின் நிறுவுதல் மூலம் உதவுவது உடல் உளரீதியாக உதவியாக இருக்கும். உலகளாவிய ரீதியில் அபிவிருத்தி அடைந்தநாடுகளில் இவை பரவலாக செயற்பட்டு வருகின்றமை நாம் அறிந்ததே. நமது நாட்டிலும் சுமித்ரயோ (Sumithrajo) என்ற அமைப்பு 1974 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு தற்கொலைத் தடுப்புக்கான வழிப்புணர்வுகள், கருத்தரங்குகள் முன்னெடுத்து வருகின்றது. இதன் ஆய்வின்படி வவுனியா, மொனராகல மாவட்டங்களிலும் வடமேல் மாகாணங்களிலும் அதிக தற்கொலை இடம்பெறுவதாக கூறுகிறது. இவ்வமைப்பு பாடசாலை பல்கலைக்கழகம் பின்தங்கிய கிராமங்கள் என விழிப்புணர்வு சார் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

4. வாழும் திறன்களை வளர்ப்பு – நாம் வாழும் வாழ்க்கையில் பல்வேறுவிதமான ஏமாற்றம் தோல்வி என்பன அடிக்கடி ஏற்படும். ,தற்காக நமக்கு பக்குவப்பட்ட மற்றும் தெளிவான உள்ளம் தேவை. இதற்காக வாழும் திறன்களான சமுதாயதிறன்கள் (Social skills) பிரச்சினையிலிருந்து எப்படி விடுபடுவது, கையாள்வது (Critical thinking), புதியனபற்றி யோசிக்கும் திறன் (Creative skill), பிரச்சினையை எதிர்கொள்ளல், தீர்த்தல் (Problem solbing), மனித தொடர்பு (Interpersonal skill), தைரியமாக இருப்பது (நம்பிக்கை, வீரம்) ஆகியவற்றை வளர்த்துக்கொள்வதன் மூலம் உளரீதியான மேம்பாடு, தெளிவு மற்றும் பக்குவநிலை ஏற்பட்டு வாழ்க்கை சிறப்பாக வழிவகுக்கும்.

5. கல்விமுறை மற்றும் சுயமரியாதை மேம்பாடு – சிறுவயதிலிருந்தே moral education ஒழுக்கம் அறிவுசார் வாழ்வியல் கல்வியை சரியான முறையில் போதிப்பது அவசியம். வாழ்வின் சிறப்பு மற்றும் அதன் முக்கியத்தும் என்பன பற்றி கற்பித்தல் வேண்டும். ,ன்றைய கல்விமுறை தனியே

தொடர்ச்சி▼

# வாழ்வது ஒருமுறை வாழ்த்தட்டும் தலைமுறை!

**தொடர்ச்சி▲**

பாடத்திட்டத்தை ஒட்டி அமைகிறதே தவிர வாழ்க்கை மற்றும் ஒழுக்கம் சார்ந்து அமைவது குறைவாகவே காணப்படுகின்றது. ஒவ்வொருவரும் தனது பலம், பலவீனம், வாய்ப்புக்கள் சாவால்கள் என்பவற்றை கண்டறிந்து தன்னம்பிக்கையை வளர்க்க வேண்டும். அத்துடன் ஆரோக்கியமாக முடிவெடுக்கும் திறன், சுயமதிப்பு, சுயகட்டுப்பாடு, பணிவு, சட்டங்களை மதித்தல் என்பன சுயமரியாதையை மேம்படுத்தும்.

6. போதைப்பொருள் தடுப்பு – போதைப்பொருளை இயன்றளவு குறைப்பதன் மூலம் தற்கொலைகள் நிகழ்வது மட்டுமன்றி அதனுடன் தொடர்புடைய வன்முறைகள் சீரழிவுகளை குறைக்க முடியும். சிறு வயதிலிருந்தே மாணவர்களுக்கு போதைப்பொருள் விழிப்புணர்வுகளை குடும்பம் மற்றும் பாடசாலையிலிருந்து ஏற்படுத்துவது முக்கியமானதாகும்.

7. சுயகட்டுப்பாடு மற்றும் தன்னம்பிக்கை – சுய மதிப்பீடு போல சுயகட்டுப்பாடும் ஒருவனை குறிப்பிட்ட சூழலில் சரியான முறையில் தெளிவான முடிவுகளை எடுப்பதற்கும் அவசியமாகிறது. தன்னம்பிக்கை மற்றும் சுவாரஸ்யமான தருணங்களை தாங்கும்திறன் நல்லது – கெட்டது எது என அறியும் திறனை வளர்த்துக் கொள்வதும் முக்கியமாகிறது. மனித நல்லிணக்கம் மற்றும் சமூக உறவுகளை சீராக அமைப்பதனூடே சுயகட்டுப்பாடு மற்றும் சமூகமனப்பான்மையை வளர்க்கலாம். கடந்த கால பிரச்சினையை நினைத்து தேங்கி நிற்காமல் அடுத்த திட்டத்துக்கு நகரும் உறுதியான மற்றும் பலமான மனம் வேண்டும். (The past, its done. move on)

8. தியானம் யோகாசனம் மற்றும் உடற்பயிற்சி செய்தல் – உடற்பயிற்சி செய்வதன் மூலம் உடல் மற்றும் மனம் இரண்டும் நலமான நிலையை அடைகிறது. இதுமட்டுமன்றி தியானம் மற்றும் யோகாசனம் என்பனவும் மனதை ஒருநிலைப்படுத்தவும், நேரான சிந்தனைகளை ஏற்படுத்தவும் மனம் தெளிவடையவும் தன்னம்பிக்கையைக் கட்டியெழுப்பவும் உறுதுணையாக அமைகிறது.

9. ஆன்மீக செயற்பாட்டில் ஈடுபடல் மற்றும் இசை கேட்டல் – ஆன்மீகம் சார் செயற்பாடுகளில் ஈடுபடுவதன் மூலம் மனதை ஒருநிலைப்படுத்தி மனதை ஓர் பரிசுத்த நிலையை அடைய வழிவகுக்கிறது. அனைத்து சமயங்களும் பொதுவாக நல்ல கருத்துக்கள் மூலம் மனிதனை நேர்வழிநடத்தவே உதவுகின்றன. இவ்வாறான அறநெறி செயற்பாட்டில் ஆர்வம் கொண்டு ஈடுபடுவதன்மூலம் ஆரோக்கிய நல்வாழ்க்கையை கட்டியெழுப்பலாம். “இசையில் வசமாகா இதயம் எது” எனக் கூறுவார்கள். நல்ல மனதுக்கு இனிமையான இசையை கேட்பதன் மூலம் தமது எண்ண ஓட்டங்களை சிறப்பாக்கவும் உணர்வுகளின் முகாமைத்துவத்துக்கும் உதவுகிறது.

மேற்குறித்த தடுப்புமுறைகள் மற்றும் தீர்வுகளை பின்பற்றுவதன் மூலம் தற்கொலையை தடுக்கலாம். அத்தோடு தற்கொலை தடுப்பு பற்றிய பரப்புரையை மக்கள் கருத்தாக மாற்றி அனைவரும் கரம் கோர்த்து செயற்பட்டால் தற்கொலை எனும் கொடிய பிரச்சினையை முற்றாக ஒழிக்க முடியும்.

ஆண் – பெண், இரவு – பகல், இன்பம்–துன்பம், வாழ்வு – தாழ்வு, பிறப்பு – இறப்பு என அனைத்தையும் இரண்டாகத் தந்த இறைவன் சிக்கல் –தீர்வு என்ற இரண்டையும் தந்துள்ளான். ஆதலால் ஒரு சிக்கல் ஏற்பட்டாலும் உரிய தீர்வை நாம் போராடி பெறவேண்டியது அவசியம். ஏனெனில் பிரச்சினையை எதிர்கொண்டு அதனை வெற்றிகொண்டு வாழ்வதனாலேயே இப்போட்டி நிறைந்த உலகில் வாழ முடியும்.

# பிரேத அறை வசதிகள் எவையுமின்றி தம்பலகாமம் பிரதேச வைத்தியசாலை!




(ஹஸ்பர் ஏ.எச்.)

தம்பலகாமம் பிரதேச வைத்தியசாலையில் பிரேத அறை இல்லை. இதனால் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. உடனடியாக இந்தப் பிரச்சினை நிவர்த்தி செய்யப்பட வேண்டும் என்று தம்பலகாமம் பிரதேச சபையின் தவிசாளர் எச்.தாலிப் அலி தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு நேற்று (08) கருத்துவெளியிடும்போதேஇவ்வாறுதெரிவித்தார்.

ஒரு சம்பவம் நடந்த நிலையில் உயிர் சேதம் ஏற்பட்டு உரிய சடலம் பாதுகாப்பாக வைத்து விசாரனையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கும்வரை அதற்கான பிரேத அறை இன்மையால் பல இன்னல்கள் ஏற்படுகின்றன.

நேற்று முன்தினம் இடம் பெற்ற ஒரு சம்பவத்தின் போது குறித்த சடலம் இரவு 11 மணியளில் இருந்து மறுநாள் காலை 10 மணிவரை இருந்துள்ளன.

இதன் தேவைப்பாடு தொடர்பில் பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டத்திலும் பேசப்பட்டுள்ளது. ஆனால் தீர்வில்லாமல் உள்ளது. இது உடனடியாக செய்து கொடுக்கப்பட வேண்டும்.– என்றார்.

# மலையக அதிகார சபையை வலுவிழக்கச்செய்யும் அரசின் செயற்பாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது!

## நாடாளுமன்ற உறுப்பினர் சத்தியலிங்கம் தெரிவிப்பு



2018 ஆம் ஆண்டு 32 ஆம் இலக்கச் சட்டத்தின்மூலம் உருவாக்கப்பட்ட மலையக அதிகாரசபை முறைமையை வலுவிழக்கச் செய்யும் தற்போதைய அரசின் செயற்பாட்டை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் பத்மநாதன் சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் ஊடகங்களுக்கு அனுப்பிவைத்த செய்திக் குறிப்பில்,

இந்த நாட்டில் வாழும் வடக்குக் கிழக்கு தமிழ் மக்களைப் போன்றே மலையகத் தமிழ் மக்களின் உரிமைகளும் மாறி மாறி நாட்டை ஆட்சி செய்த அரசுகளால் மறுக்கப்பட்டு வந்துள்ளமை துரதிர்ஷ்டவசமானது. மலையக மக்களின் உழைப்பு தொடர்ந்தும் சுரண்டப்பட்டுவந்தாலும் அவர்களுக்கான அடிப்படை உரிமைகளைக்கூட ஆட்சியாளர்கள் முழுமையாக வழங்கவில்லை என்பதே கசப்பான உண்மையாகும். குறிப்பாக மலையக சமூகத்தினரின் காணி உரிமை, வீட்டு உரிமை, கல்வி உரிமை மற்றும் சுகாதார உரிமை ஆகியவை நாட்டில் வாழும் ஏனைய சமூகத்தினருக்குக் கிடைப்பது போன்று கிடைக்கவில்லை.

எனவே, இந்த உரிமைகள் மக்களுக்கு கிடைப்பதை உறுதிப்படுத்தும் வகையில் கடந்த நல்லாட்சி அரசில் மலையக அதிகார சபை எனும் பொறிமுறை உருவாக்கப்பட்டிருந்தது. இது ஒரு ஆரோக்கியமான விடயமாகும். எனினும் ஆட்சிமாற்றங்கள் எற்பட்டதன் காரணமாக அதன் நன்மைகள் மக்களை சென்றடையவில்லை.

இந்த நிலையில் தற்போதைய அரசால் இந்த அதிகார சபையானது அமைச்சு ஒன்றின் கீழ் கொண்டுவருவதற்கான முயற்சிகள் நடைபெறுவதாக அறியமுடிகின்றது. இந்த நாட்டின் நலிவடைந்த சமூகமாகவுள்ள தரப்பினரை ஏனைய சமூகத்தினருக்கு சமமாகக் கொண்டு வருவதற்காக உருவாக்கப்பட்ட இந்த அதிகார சபை கட்டமைப்பை வலுப்படுத்துவதை விடுத்து அதனை அமைச்சொன்றினகீழ் கொண்டு வருவதானது அதனை மேலும் வலுவிழக்கச் செய்வதாக அமைந்துவிடும்.

ஆகவே மலையக சமூகத்தினரும் அனைத்து உரிமைகளையும் அனுபவிக்கும் நிலைமை உருவாக்கப்படும் வரையாவது இந்தக் கட்டமைப்பை வலுவிழக்கச் செய்யகூடாதென அரசிடம் கோரிக்கை முன்வைக்கின்றேன்.- என்றுள்ளது.

# நாட்டில் மீண்டும் ஒரு பாதாள உலகம் உருவாகுவதற்கு எந்த வாய்ப்புமில்லை!

## அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவிப்பு

(க.கிஷாந்தன், பொகவந்தலாவ எஸ். சதீஸ்)




நாட்டில் மீண்டும் ஒரு பாதாள உலகம் உருவாகுவதற்கு வாய்ப்பில்லை. ஏனென்றால் இப்போது அந்த ஊழல் அரசியல் காலம் முடிந்துவிட்டது.

இவ்வாறு பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்தார்.

ஹட்டனில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர்,

பாதாள உலகம் தனித்தனியாகச் செயற்படவில்லை. பாதாள உலகம் அரசியலால் வளர்க்கப்பட்டது. பின்னர், நெருக்கடி வந்தபோது, அவர்கள் ஒருவருக்கொருவர் சண்டையிடும் சூழ்நிலையாக மாறியுள்ளது.

பாதாள உலகம் இலங்கைக்குள் மட்டுமல்ல, வெளியேயும் இயங்கி வருகின்றது. இப்போது, அதை நாங்கள் ஒழித்து வருகின்றோம். ஒவ்வொன்றாக, அதை சுத்தம் செய்வோம். எதிர்வரும் காலங்களில் நாட்டு மக்கள் இதை தெளிவாகக் காண முடியும் என்று நினைக்கிறேன். இப்போது பாதாள உலகத்துக்கு மன்னிப்பு இல்லை. எனவே, பாதாள உலகம் சுத்தம் செய்யப்படும்.

இப்போது, பாதாள உலகம் இலங்கைக்குள் மட்டுமே செயல்படும் ஒன்றல்ல என்பதை யாராலும் புரிந்து கொள்ள முடியும். பாதாள உலகம் இலங்கையை சர்வதேச மட்டத்துக்குக் கொண்டு சென்றுள்ளது. பின்னர் அந்த அளவுக்கு பாதாள உலகத்துக்கு யார் உணவளித்தனர்? இந்த அரசு இல்லையெனில், பாதாள உலகத்துக்கு என்ன நடந்திருக்கும்? நாடு அழிக்கப்பட்டு விடும்.

பாதுகாப்பு தொடர்பான முடிவுகளை எடுக்கிறோம். 76 ஆண்டுகளாக தவறான பாதையில் சென்ற ஒரு நாட்டை இரண்டு நாள்களில் சரியான பாதைக்குக் கொண்டுவருவது எளிதான காரியம் அல்ல. நாங்கள் நிச்சயமாக மாற்றுவோம். ஒரு மாற்றத்தை உருவாக்குவோம்.- என்றார்.



# வடக்கு மாகாணத்தில் ஒவ்வொரு பிள்ளையினதும் அடிப்படை உரிமை உறுதிப்படுத்தப்பட வேண்டும்!

## ஆளுநர் நா.வேதநாயகன் சுட்டிக்காட்டு









வடக்கு மாகாணத்தில் உள்ள ஒவ்வொரு பிள்ளைகளதும் அடிப்படை உரிமைகளையும் அவர்களது தேவைகளையும் வசதிகளையும் உறுதிப்படுத்த வேண்டியது எங்கள் அனைவரதும் பொறுப்பாகும். அதேநேரம் அவர்களுக்கான உதவிகளைச் செய்வதற்கு பலர் தன்னார்வமாக தயாராக உள்ள போதும் அது ஒருங்கிணைந்த ஒழுங்கமைக்கப்பட்ட கட்டமைப்பின் ஊடாக கிடைக்கப் பெறுவதற்கு உரிய ஏற்பாடுகளை நாம் துரிதமாகச் செய்யவேண்டியிருக்கின்றது.

இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் குறிப்பிட்டார்.

இந்தியத் துணைத்தூதரகமும், போலோ ஆய்வகமும் இணைந்து 'போசாக்கு ஊட்டச்சத்து ஆரோக்கியம் மற்றும் ஆரம்பகால கற்றல் ஒரு குழந்தையின் எதிர்காலத்துக்கான இணைப்பு' என்னும் தலைப்பில் உலகளாவிய கருத்தரங்கு யாழ். திருவள்ளுவர் கலாசார மண்டபத்தில் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இந்தியாவில் இருந்து வருகை தந்த கல்வி உளவியாளரும் சிறுவர் உரிமைக்கான நிபுணருமான கலாநிதி சரண்யா ஜெய்குமார் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஆளுநர் தனது உரையில்,

வடக்கு மாகாணத்தை நாட்டின் ஏனைய மாகாணங்களில் இருந்து வித்தியாசப்படுத்தி நோக்க வேண்டும். மிக நீண்ட நெடிய போரால் பாதிக்கப்பட்ட மாகாணம் என்ற நோக்கு நிலையிலேயே அணுகவேண்டும். இந்த மாகாணத்தின் குழந்தைகள் போரால் தங்கள் பெற்றோர்களை இழந்திருக்கின்றார்கள். பல குடும்பங்கள் தங்கள் குடும்பத்தின் வருமானமீட்டுபவர்களைப் பறிகொடுத்திருக்கின்றார்கள். இந்தப் பின்னணிகளையும் கருதில் எடுத்தே எமது பிள்ளைகளின் எதிர்காலத்தை நாம் வடிவமைக்கவேண்டியிருக்கின்றது.

கல்விக்கு வறுமை ஒருபோதும் தடையாக இருக்கக் கூடாது. அதற்காகத்தான் அரசு பல்வேறு உதவிகளைச் செய்து வருகின்றது. ஆனால் பிள்ளைகள் கல்வியைப் பெற்றுக் கொள்வதற்குக் குடும்பச் சூழல் செல்வாக்குச் செலுத்துகின்றது. மீள்குடியமர்ந்த குடும்பங்கள் இன்னமும் தங்கள் இயல்பு வாழ்க்கைக்கு முழுமையாகத் திரும்பவில்லை. அதே போல் பல்வேறு பாதிப்புக்களை எதிர்கொண்ட – எதிர்கொண்டு இருக்கும் குடும்பங்களின் பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்லுமா என்பது கேள்விக்குறியே?

அதேநேரம் வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாண மாவட்டம் தவிர்ந்த ஏனைய 4 மாவட்டங்களிலும் தனிமைப்படுத்தப்பட்ட பல கிராமங்கள் இருக்கின்றன. அங்கு பிள்ளைகளும் குறைவு. அதனால் அங்குள்ள பாடசாலைகள், ஆரம்பப் பாடசாலைகள் மூடப்படுகின்றன. அந்தப் பிள்ளைகளுக்குப் பல கிலோ மீற்றர் தூரம் பயணித்து கல்வியைப் பெற்றுக் கொள்வதற்கான இயலுமையும் குறைவு. அனைவருக்கும் சம வாய்ப்பு என்பது அந்தப் பிள்ளைகளுக்கு கிடைப்பதில்லை. இதை மாற்றியமைப்பதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

போர் உள்ளிட்ட பல்வேறு காரணிகளால் எங்கள் பிள்ளைகள் தங்கள் பெற்றோர்களை இழந்திருக்கின்றார்கள். அவர்கள் பேரன் அல்லது பேர்த்தியின் அரவணைப்பில்தான் வளர்ந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களின் எதிர்காலம் மற்றும் பாதுகாப்புக் குறித்தும் நாம் கவனம் செலுத்தவேண்டியவர்களாக இருக்கின்றோம்.

எனவேதான் வடக்கு மாகாணத்தை ஏனைய மாகாணங்களில் இருந்து தனித்துவமான கோணத்தில் நோக்க வேண்டும் என்பதைக் குறிப்பிட்டிருந்தேன். எமது மாகாணத்தின் இந்தச் சவால்களைத் தீர்ப்பதற்கும் நாம் வித்தியாசமான அணுகுமுறையையே பின்பற்றவேண்டியிருக்கும். எனவே அதற்கு இந்தக் கருத்தரங்கு உதவியாக இருக்கும் என நம்புகின்றேன்.– என்றார்.

இந்தியத் துணைத்தூதுவர் சாய்முரளி, யாழ். மாவட்டச் செயலர் ம.பிரதீபன் ஆகியோரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், தேசியக் கல்வியற் கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள், அரச அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

# கல்முனை மாநகர சபைக்கு புதிய கட்டடத் தொகுதி!

## இந்திய நிதியில் அமைக்க நிசாம் காரியப்பர் நடவடிக்கை

(அஸ்லம் எஸ்.மௌலானா)

இந்திய அரசின் நிதி அனுசரணையில் கல்முனை மாநகர சபைக்கான புதிய கட்டடத் தொகுதியை அமைப்பதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

கடந்த 2013 - 2014 காலப் பகுதியில் கல்முனை மாநகர மேயராகத் தான் பதவி வகித்தபோது, அப்போதைய இந்தியத் தூதரைச் சந்தித்து, 75 வருட கால பழைமை வாய்ந்த, பாவனைக்கு உதவாத கல்முனை மாநகர சபைக் கட்டடத்துக்குப் பதிலாக கேட்போர் கூடம் மற்றும் சபா மண்டபம் உள்ளடங்களாக அனைத்து வசதிகளும் கொண்ட புதிய கட்டடத் தொகுதியை அமைப்பதற்கான ஒத்துழைப்பைக் கோரியிருந்தார்.

இதற்கு அமைவாக நிதியுதவி அளிக்க இந்திய அரசு முன்வந்திருந்தது. எனினும் அப்போது வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் (ஈசுனு) அனுமதி கிடைத்திருக்கவில்லை.

இவ்வாறான பின்னணியில், தற்போதைய இந்தியத் தூதர் சந்தோஷ் ஜாவை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் சகிதம் அண்மையில் சந்தித்த நிசாம் காரி



யப்பர் அவரிடம் இத்திட்ட முன்மொழிவை சமர்ப்பித்திருந்தார்.

இதற்கு வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் (ERD) அனுமதி பெற்றுத் தரப்பட்டால் குறித்த திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இந்திய அரசு தயாராக இருக்கிறது என்று தூதர் உறுதியளித்திருக்கிறார்.

இந்த நிலையில் இந்தத் திட்ட முன்மொழிவுக்கு வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் அனுமதியை பெற்றுக் கொள்ள வேண்டுமாயின் முறையே கல்முனை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவினதும் அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவினதும் அங்கீகாரம் பெறப்பட வேண்டும் என்ற விதிமுறைக்கு அமைவாக அவற்றின் அங்கீகாரத்தை பெறுவதற்கான நடவடிக்கைகளில் நிசாம் காரியப்பர் ஈடுபட்டுள்ளார்.

எதிர்வரும் 18 ஆம் திகதி கல்முனை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெறவுள்ள நிலையில் குறித்த திட்ட முன்மொழிவை அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பிக்கவிருப்பதாகவும் இவ்விடயத்தை கூட்ட நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக் கொள்ளுமாறும் கல்முனை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் ஏ. ஆதம்பாவை அவர் கடிதம் மூலம் கேட்டுள்ளார்.

2025 ஆம் ஆண்டுக்கான 'பட்ஜெட்' முன்மொழிவில் வடக்கு மாகாண அபிவிருத்திக்கென அதிகளவு நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்ட நிலையில், கிழக்கு மாகாண அபிவிருத்திப் பணிகளை இந்திய அனுசரணையுடனான அபிவிருத்தித் திட்டங்களில் உள்வாங்க முடியும் என்று ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க அறிவித்திருந்திருந்தார்.

இந்தப் பின்னணியில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர், கல்முனை மாநகர சபைக்கான புதிய கட்டடத் தொகுதியை அமைப்பதற்கு இந்திய அரசின் நிதியுதவியைப் பெற்றுக் கொள்வதற்கான தனது நீண்ட கால முயற்சிகளை மீண்டும் ஆரம்பித்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மகப்பேற்று மருத்துவ நிபுணர்களின் மாநாட்டில் உலகப்புகழ் பேராசிரியர் அருள்குமரன் பங்கேற்பு








( வி.ரி.சகாதேவராஜா)

இலங்கை மகப்பேற்று மற்றும் மகளிர் மருத்துவ நிபுணர்கள் கல்லூரியின் 58 ஆவது வருடாந்த விஞ்ஞான அமர்வுகள் கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் இடம்பெற்றன.

இதில் பேராசிரியர் சபாரட்ணம் அருள்குமரன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

பேராசிரியர் அருள்குமரன் மகப்பேறு மற்றும் மகளிர் மருத்துவத் துறையில் உலகப் புகழ்பெற்ற கல்வியாளர் மற்றும் மருத்துவர் ஆவார்.

அவர் சர்வதேச மகளிர் மற்றும் மகப்பேறியல் சம்மேளனம் (FIGO), ரோயல் காலேஜ் ஆஃப் மகப்பேறியல் மற்றும் மகப்பேறு மருத்துவர்கள் (RCOG) மற்றும் பிரிட்டிஷ் மருத்துவ சங்கம் (BMA) ஆகியவற்றின் கடந்தகால தலைவராக இருந்துள்ளார்.

மருத்துவப் பயிற்சி, மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி ஆகியவற்றில் விரிவான பங்களிப்பை வழங்கிய அவர், பல தலைமுறை பயிற்சியாளர்களுக்கு வழிகாட்டும் பல பாடப்புத்தகங்கள் மற்றும் அறிவியல் கட்டுரைகளை எழுதியுள்ளார். மருத்துவத்துக்கான அவரது சிறந்த சேவைகளை அங்கீகரிக்கும் வகையில், அவரது மாட்சிமை ராணி இரண்டாம் எலிசபெத் அவர்களால் அவருக்கு நைட்ஹுட் வழங்கப்பட்டது, இது ஒரு அரிய மற்றும் மதிப்புமிக்க கௌரவமாகும்.

பேராசிரியர் அருள்குமரன், தாய் மற்றும் பிறந்த குழந்தைகளின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்காக வாழ்நாள் முழுவதும் அர்ப்பணித்ததற்காக உலகம் முழுவதும் பரவலாக மதிக்கப்படுகிறார் என மட்டக்களப்பு பொது வைத்தியசாலை மகப்பேறு நிபுணரும் கிழக்கு பல்கலைக்கழக மருத்துவ பீட பேராசிரியருமான வைத்திய கலாநிதி மார்க்கண்டு திருக்குமார் தெரிவித்தார்.



# எட்டு மில்லியன் ரூபா செலவில் புதிய வகுப்பறை கட்டடத் தொகுதி

## திருக்கோவிலில் ஆளுநரால் திறந்து வைப்பு

**(ஹஸ்பர் ஏ.எச்.)**

கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தில் உள்ள திருக்கோவில் கல்வி வலய விநாயகபுரம் கனிஷ்ட கல்லூரியில், கிழக்கு மாகாண நிதியில் இருந்து 8 மில்லியன் ரூபா செலவில், வகுப்பறைகளுடன் கூடிய இரண்டு மாடிக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.

இதன் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்த நிலையில் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகர தலைமையில் அண்மையில் கற்றல் செயற்பாடுகளுக்காகக் கையளிக்கப்பட்டது.

இதில் ஆளுநரின் பிரத்தியேக செயலாளர் உள்ளிட்ட மற்றும் துறை சார் அதிகாரிகளும் பங்கேற்றனர்.












# சம்மாந்துறை பொலிஸ் பொறுப்பதிகாரி கே.டி.எஸ். ஜெயலத்துக்குப் பிரியாவிடை!





**(தில்சாத் பர்வீஸ்)**

சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் கடந்த 5 வருடங்களாகக் கடமையாற்றிய சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, பிரதான பொலிஸ் பரிசோதகர் கே.டி.எஸ் ஜெயலத்தின் இடமாற்றத்தை முன்னிட்டு, அவருக்கான பிரியாவிடை நிகழ்வு நேற்று (08) திங்கட்கிழமை சம்மாந்துறை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி ஏ.எம். நௌபர் தலைமையில் சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், சம்மாந்துறை பிரதேச செயலாளர் தேசபந்து எஸ்.எல்.முஹம்மது ஹனீபா, சம்மாந்துறை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி ஏ.எம். நௌபர், பொலனறுவை மாவட்ட சிரேஷ்ட நீர்ப்பாசன பொறியியலாளர் எம்.எஸ்.எம். நவாஸ், சம்மாந்துறை பிரதேச செயலக திடீர் மரண விசாரணை அதிகாரி ஏ.எச். அல் ஜவாஹிர், தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண இணைப்பாளர் எம்.எம்.ஜி.பி.எம். றசாட், சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம். எம். நௌசாத், சம்மாந்துறை பிராந்திய நீர்பாசன பொறியியலாளர் ஆர். வேல் கஜன், சம்மாந்துறை பொலிஸ் நிலைய உபதேச குழுவின் தவிசாளர் ஏ.ஜே. காமில் இம்டாட், அல் உஸ்வா இஸ்லாமிக் அமைப்பின் தலைவரும் அல் உஸ்வா மகளிர் அரபுக் கல்லூரியின் அதிபருமான மௌலவி ஐ.எல். எம். முஸ்தபா, சம்மாந்துறை வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் அல்ஹாஜ் ஹக்கீம், சம்மாந்துறை நம்பிக்கையாளர் சபை உப தலைவர் அல்ஹாஜ் கே.எம். கே.றம்சீன், ஆர்.எஸ்.எச். லங்கா சோலர் நிறுவனத்தின் தவிசாளர் எம்.எஸ்.எம். றியால் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டு, அவரின் சேவையைப் பாராட்டினர்.






# மருதமுனை ‘கோல்ட் மைன்ட்’ இறுதிப் போட்டிக்குத் தெரிவு!

**(பாறுக் ஷிஹான்)**

மின்னொளி உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் முதலாவது அரை இறுதிப் போட்டி வெள்ளிக்கிழமை (05) இரவு மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இதன் போது மருதமுனை கோல்ட் மைன்ட் விளையாட்டு கழகம் 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தெரிவானது.

குறித்த முதலாவது அரை இறுதிப் போட்டியில் மருதமுனை கோல்ட் மைன்ட் விளையாட்டு கழகமும் ஈஸ்டன் யூத் விளையாட்டு கழகமும் ஒன்றை ஒன்று எதிர்த்து விளையாடின.

போட்டியின் முதல் இடைவேளைக்கு முன்னர் ஈஸ்டன் யூத் விளையாட்டு கழகம் முதலாவது கோலினை போட்டது. பின்னர் ஆர்வத்துடனும் விடா முயற்சியுடனும் சிறந்த களத்தடுப்புடன் விளையாடிய கோல்ட் மைன்ட்விளையாட்டு கழகம் 2 கோல்களைப் போட்டு இறுதியில் (02:01) என்ற கோல் வித்தியாசத்தில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தெரிவாகியது.

கோல்ட் மைன்ட்விளையாட்டு கழகம் சார்பாக ரிம்சான் மற்றும் ஆதிப் ஆகியோர் கோல்களை போட்டிருந்தனர்.

குறித்த அரை இறுதிப் போட்டிக்கு கல்முனை மாநகர முன்னாள் முதல்வர் சிரேஸ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன் கௌரவ அதிதியாக சட்டத்தரணி சன்ஜித் காதர் இப்றாகிம் கலந்து கொண்டார்.









# நச்சுத் தன்மையான பாதீனியத்தின் பரம்பலை மன்னாரில் ஆரம்பத்திலேயே தடுக்க வேண்டும்

## விவசாயப் பணிப்பாளர் திருமதி சகிலா பானு தெரிவிப்பு

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்டம் தற்போது நச்சுத் தன்மையான பாத்தீனியம் பரம்பலின் ஆரம்ப நிலையில் உள்ளமையால் அயல் மாவட்டங்களான வவுனியா, யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களில் பாரிய அளவில் காணப்படுவதாலும் ஓரளவுக்கு ஒப்பான கால நிலைகளைக் கொண்டிருப்பதாலும் இது மிகவிரைவாக மன்னார் மாவட்டத்திலும் பரவ வாய்ப்புக் கள் அதிகம் உள்ளது.



ஆகவே மன்னாரை பாதீனியக் களை யிலிருந்து பாதுகாக்க மாவட்ட விவசாய அமைப்புக்கள் மற்றும் கிராம அபிவிருத்தி சபைகள் இணைந்து பொதுமக்கள் விழிப்புணர்வை அதிகரிக்கும் வகையில் செயற்பட வேண்டும் என மன்னார் மாவட்ட விவசாயப் பணிப்பாளர் திருமதி சகிலா பானு தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்ட விவசாயப் பணிப் பாளர் திருமதி சகிலா பானு விவசாயிகள் மற்றும் பொது மக்களுக்கு விடுத்திருக்கும் செய்தியில்,

பாதீனியம் (Porthenium hysterophorus) என்பது மெக்சிகோவை பூர்விகமாகக் கொண்ட ஒரு நச்சுத்தன்மையுடைய தாவரமாகும் ஆயினும் தற்போது இந் தியா. இலங்கை. போன்ற நாடுகளிலும் ஓர் ஆக்கிரமிப்பு களையாக (Inversive allion) உருவெடுத்துள்ளது.

இது இலங்கைக்கு சுமார் 1980களில் உணவுத் தானியங்கள் அல்லது இயற்கை உரங்கள் வழியாக அறிமுகமாகியி ருக்கலாம் என்று கருதப்படுகின்றது. ஆனாலும் இன்று இது நாட்டின் பல்வேறு பகுதிகளில் பரவி விவசாய நிலங்கள், சாலையோரங்கள், கால்நடை மேய்ச்சல் நிலங்கள், மற்றும் வீட்டின் சுற்றுப்புறச் சூழல்களில் கூட பரவிக் காணப்படு கின்றது.

இதன் வேர்கள் மற்றும் இலைகள் வெளியிடும் தாவர வேதிப் பொருள்கள் (Allelopathic) இந்தத் தாவரத்தைச் சுற்றியுள்ள ஏனைய பயிர்களின் வளர்ச் சியியைத் தடுக்கும். அத்தோடு மனிதனில் தோல் மற்றும் சுவாசம் தொடர்பான நோய்கள் உருவாக்கப்படுவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டம் தற்போது பாத் தீனியம் பரம்பலின் ஆரம்ப நிலையில் உள்ளதெனிலும் அயல் மாவட்டங்களான வவுனியா. யாழ்ப்பாணம் போன்ற மாவட் டங்களில் பாரிய அளவில் காணப்படு வதாலும் ஓரளவுக்கு ஒப்பான கால நிலைகளை கொண்டிருப்பதாலும் இது மிகவிரைவாக மன்னார் மாவட்டத்திலும் பரவ வாய்ப்புக்கள் அதிகம் உள்ளது.

எனவே இவற்றை முற்றுமுழுதாக அழித்து மன்னார் மாவட்டத்தை பாது காக்கவேண்டியது எமது தலையாய கடமையாகும்.

புவியியல் அமைவிட முறைமை தொழில்நுட்பத்தின் மூலம் பாதீனியம் தோன்றும் இடங்களை துல்லியமாக கண்டறிந்து அதன் செறிவு மற்றும் பர வலை நிர்வகிக்க முடியும். மேலும் பாதீனி யம் தாவரங்களுடன் வேறு சில தாவரங் கள், இலைகள், மாடுகளின் சாணம் ஆகியவற்றுடன் சேர்த்து மண்புழு உரமாக மாற்றிக்கொள்வது சூழல் நேயமான தீர்வாகும்.

பாதீனியத்தை அதன் வளர்ச்சியின் ஆரம்ப கட்டத்தில் அதாவது பூக்கள் தோன்றுவதற்கு முன்பு கைகளால் பிடுங்கி அகற்றுவது மிகுந்த பயனுள் ளதாக அமையும் இதனை திட்டமிட்ட முறையில் பல பயிர் பரப்புக்களில் ஒரே பிரதேசத்தில் செய்யும் போது அதன் பரவலை கட்டுப்படுத்தலாம்.

இந்தப் பாதீனியக் களைகளைக்க கைகளால் கட்டுப்படுத்தும்போது கையு றைகள், சப்பாத்துக்கள் மற்றும் முகக்க வசத்தை அணிந்து அவற்றினை வேருடன் பிடுங்கி எடுத்தல் வேண்டும்.

வேர் பகுதி மண்ணில் மீளவும் இருக்கு மானாலோ அல்லது மண்வெட்டி, வீச்சு அரிவால் பாவித்து தாவர பதியப் பகுதியை மட்டும் அகற்றுவதாலோ இவற்றின் பதிய பகுதியானது தண்டுகளுடன் பற்பல பூந்துணர்களை தோற்றுவித்து பல்லா யிரக்கணக்கான விதைகள் (சுமார் 25000இலும் அதிகம்) தோற்றுவதற்கு வாய்ப்பயிக்கின்றது.

இவ்விதைகள் 10-15 வருடங்களுக்கு உறங்கு நிலையில் மண்ணில் காணப் படும் என்பதால் இத்தாவரங்கள் பூப்ப தற்கு முன்பான காலப் பகுதிகளில் தொடர்ச்சியாக 10-15 வருடங்கள் அழித் தல் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குறிப்பாக பருவ மழைக்கு முன்பான காலப் பகுதியில் அதாவது செப்ரெம்பர் - ஒக்ரோபர் மற்றும் மார்ச்- ஏப்ரல் காலப் பகுதியில் ஓரிரு மழைக்குப் பின்பு இவை முளைக்கும் காலப் பகுதியில் கட்டுப் பாட்டை மேற்கொள்வது சாலச்சிறந்தது.

மன்னாரை பாதீனியக் களையில் இருந்து பாதுகாக்க மாவட்ட விவசாய அமைப்புக்கள் மற்றும் கிராம அபிவி ருத்திச் சபைகள் இணைந்து பொது மக்கள் விழிப்புணர்வை அதிகரிக்கும் வகையில் செயற்பட வேண்டும்.

விவசாயிகளுக்கு பாதீனியம் பற்றிய அடையாளம், அதனால் ஏற்படும் நச்சு விளைவுகள், அதன் பரவல் மற்றும் கட்டுப்பாட்டு முறைகள் குறித்த அறி வையோ அல்லது நடைமுறை பயிற்சிக ளையோ பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் பணிமனை மூலமாகவோ அல்லது உங்கள் பகுதி விவசாய போத னாசிரியருடன் தொடர்பு கொள்வதன் மூலமாகவோ பெற்றுக் கொண்டு மன்னார் மாவட்டத்தை இந்த ஆக்கிர மிப்புகளிலிருந்து பாதுகாக்கலாம்.- என்றார்.





# மனித பாவனைக்கு உதவாத உணவுகளை விற்பனை செய்த உணவகத்துக்குச் 'சீல்'!

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு ரயில் நிலைய வீதியில் மனித பாவனைக்கு உதவாத உணவுகளை தயாரித்து விற்பனையில் ஈடுபட்ட உணவகம் ஒன்றில் இருந்து உணவு வகைளை மீட்கப்பட்டன. நீதிமன்ற உத்தரவுக்கமைய உணவகத்தை பொது சுகாதார பரிசோதகர்கள் 'சீல்' வைத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று திங்கட்கிழமை (08) இடம்பெற்றுள்ளது.

இந்த உணவகம் தொடர்பாகப் பொது சுகாதார பரிசோதகர்களுக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம் கோட்டமுனை பொது சுகாதார பரிசோதகர் தவராஜா மிதுன்ராஜ் தலைமையில் பொது சுகாதார பரிசோதகர் எஸ்.கஜனன் இந்த உணவகத்தை நேற்று முற்றுகையிட்டனர்.

இதன்போது அங்கு மனித பாவனைக்கு உதவாத உற்பத்தி செய்த உணவான 6 கிலோ சோறு, 2 கிலோ பொரித்த கோழி, 2 கிலோ மீன் பெரியல், 3 கிலோ சமைத்த மீன், 3 கிலோ பழுதடைந்த வெங்காயம் போன்ற உணவுகளை மீட்டனர்.

இதனையடுத்து மனித நுகர்வுக்குப் பொருத்தம் இல்லாத உணவு உற்பத்தி செய்தமை உட்பட 5 குற்றச்சாட்டுக்களின் கீழ் உணவக உரிமையாளருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தனர்.

இதனையடுத்து குறித்த உணவகத்தை நாளை 10 ஆம் திகதி வரை மூடுமாறு நீதிமன்றநீதிவானின்கட்டளையையடுத்து குறித்த உணவகத்தை பொது சுகாதார பரிசோதகர்கள் மூடி சீல் வைத்தனர்.



# டில்லியில் அமித் ஷாவுடன் செங்கோட்டையன் சந்திப்பு

ஹரித்வார் செல்வதாகக் கூறி கோவையிலிருந்து டில்லி புறப்பட்டுச் சென்ற அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன், திடீர் திருப்பமாக உள்துறை அமைச்சர் அமித் ஷாவை அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசியுள்ளார்.

அ.தி.மு.கவில் இருந்து பிரிந்து சென்றவர்களை இணைக்கும் முயற்சியை 10 நாள்களில் தொடங்க வேண்டும் என அக்கட்சியின் பொதுச்செயலாளர் பழனிசாமிக்கு, முன்னாள் அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் கெடு விதித்தார்.

இதைத் தொடர்ந்து அவரிடம் இருந்த அமைப்புச் செயலாளர், ஈரோடு புறநகர் மேற்கு மாவட்டச் செயலாளர் ஆகிய பதவிகளை பறித்து பழனிசாமி நடவடிக்கை எடுத்தார். மேலும், அவருடன் கோபி, நம்பியூரைச் சேர்ந்த சில நிர்வாகிகளின் பதவிகளும் பறிக்கப்பட்டன.

இதைத் தொடர்ந்து முன்னாள் அமைச்சர் செங்கோட்டையனை ஈரோடு மாவட்டம் கோபியில் உள்ள அவரது இல்லத்தில் ஆதரவாளர்கள் தொடர்ந்து சந்தித்து ஆதரவு தெரிவித்தனர்.



இந்நிலையில், கே.ஏ.செங்கோட்டையன் கோபியில் இருந்து புறப்பட்டு நேற்று காலை கோவை சென்றார். பின்னர் கோவை, பீளமேட்டில் உள்ள சர்வதேச விமான நிலையத்தில் இருந்து புதுடில்லி புறப்பட்டுச் சென்றார்.

முன்னதாக அவர் கோவையில் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

நான் ஹரித்வாரில் உள்ள கோயிலுக்குச் செல்கிறேன். பா.ஜ.க. தலைவர்கள் யாரையும் சந்திக்க புதுடில்லி செல்லவில்லை. 9 ஆம் திகதி செய்தியாளர் சந்திப்பு எதுவும் இல்லை. 'கலங்க வேண்டாம்; நியாயமான கோரிக்கையைத் தான் வைத்துள்ளீர்கள்' என தொண்டர்கள் என்னிடம் சொல்கிறார்கள்.

எனவே, கோயிலுக்குச் சென்று விட்டு வந்தால் மனம் கொஞ்சம் ஓய்வாக இருக்கும். அ.ம.மு.க. பொதுச் செயலாளர் டி.டி.வி. தினகரன் கருத்துக்கு நான் பதில் கூற முடியாது. கட்சியின் நன்மைக்காக என் கருத்தை சொன்னேன்.

பல்வேறு முடிவுகளை கட்சியின் பொதுச்செயலாளர் எடுத்துள்ளார். அவர் முடிவுக்கு கருத்து சொல்ல இயலாது. காலம்தான் பதில் சொல்லும். பா.ஜ.க. தலைவர்களை சந்திக்க நான் ஹரித்வார் செல்லவில்லை. ராமரை சந்திக்கச் செல்கிறேன். வேறு யாரையும் சந்திக்கவில்லை. நாளை பிற்பகல் திரும்புகிறேன். 2 நாள்களில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் என்னை சந்தித்துள்ளனர்." என்றார்.

இந்நிலையில் திடீர் திருப்பமாக உள்துறை அமைச்சர் அமித் ஷாவை அவரது இல்லத்தில் செங்கோட்டையன் நேற்று இரவு சந்தித்தார். அப்போது, அ.தி.மு.கவில் இருந்துதான் நீக்கப்பட்டது குறித்தும் தற்போதைய சூழல் குறித்தும் அவரிடம் ஆலோசித்தார் என கூறப்படுகிறது.

## பழனிசாமி கனவு நிறைவேறாது: கனிமொழி எம்.பி. விமர்சனம்



அ.தி.மு.க. 210 தொகுதிகளில் வெற்றி பெறும் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் பழனிசாமி சொல்வது அவரது கனவு என்று கனிமொழி எம்.பி. தெரிவித்துள்ளார்.

குடியரசு துணைத் தலைவர் தேர்தல் நாடாளுமன்ற வளாகத்தில் இன்று நடக்கிறது. இதற்காக தமிழக எம்.பி.க்கள் சென்னையில் இருந்து விமானங்கள் மூலம் நேற்று டில்லிக்கு புறப்பட்டுச் சென்றனர். முன்னதாக, நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் கனிமொழி எம்.பி. செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

"குடியரசு துணைத் தலைவர் எதற்காக திடீரென இராஜினாமா செய்தார் என்ற கேள்விகளுக்கு பதில் இல்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் குடியரசு துணைத் தலைவர் தேர்தல் நடக்கிறது.

ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை உள்ள அத்தனை எதிர்க்கட்சிகளும் சேர்ந்து, ஒரு வேட்பாளரை நிறுத்தி இருக்கிறோம். ஜனநாயகத்தை காப்பாற்ற வேண்டிய கட்டாயத்தில் நாடு தள்ளப்பட்டுள்ளது. எங்கள் வேட்பாளரை வெற்றி பெற செய்ய உழைத்துக் கொண்டு இருக்கிறோம்.

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் 210 தொகுதிகளில் வெற்றி பெறுவோம் என்று கூறியிருப்பது, அவருடைய கனவு. அந்த கனவில்கூட சில தொகுதிகளை எதிர்க்கட்சிகளுக்கு விட்டுக் கொடுத்திருக்கிறார். பழனிச்சாமியின் கனவு நிறைவேறாத கனவாகத் தான் முடியும்." என்றார்.

## தேர்தலுக்கு முன்பாகவே கூட்டணி பிரச்சினை தீரும்

### தமிழிசை நம்பிக்கை



தேர்தலுக்கு முன்பாகவே கூட்டணி பிரச்சினைகள் தீர்ந்து விடும் என தமிழக பா.ஜ.க. முன்னாள் தலைவர் தமிழிசை தெரிவித்தார்.

சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் நேற்று அவர் கருத்து தெரிவிக்கையில்,

"லண்டனில் அம்பேத்கர் படிக்கும்போது தங்கியிருந்த இல்லத்தை முதல்வர் ஸ்டாலின் பார்த்துள்ளார். அந்த இல்லம் ஏலத்துக்கு வருவதை அறிந்து அதனை பா.ஜ.க. வாங்கியது. அம்பேத்கரை பற்றி புகழ்பாடிக் கொண்டிருக்கும் யாருமே கண்டுகொள்ளாத நிலையில், பா.ஜ.க. ஏறக்குறைய 30 கோடி இந்திய ரூபா செலவு செய்து, அந்த இல்லத்தை வாங்கி மதிப்புமிக்க நிரந்தர ஆவண காப்பகமாக மாற்றி வைத்திருக்கிறது.

அங்கு பெரியாரோடு அம்பேத்கர் இருக்கும் படத்தை பார்த்து மகிழ்ந்தேன் என முதல்வர் சொல்கிறார். மாற்றுக் கருத்துடைய தலைவர்களின் படத்தை அகற்றாமல் பரந்த மனப்பான்மையோடு பா.ஜ.க. நடந்து கொள்கிறது.

பா.ஜ.க. கூட்டணி பலமாக உள்ளது. 2026 இல் நாங்கள்தான் வெற்றி பெறுவோம். துணை குடியரசுத் தலைவர் தேர்தலில் சி.பி.ராதாகிருஷ்ணன் அறுதி பெரும்பான்மையுடன் வெற்றி பெறுவார்.

அதில் எந்த சந்தேகமும் இல்லை. எனவே, தமிழர்களின் எண்ணம் அவரோடு இருக்கிறது என்பதை தமிழக எம்.பி.க்கள் பறைசாற்ற வேண்டும். டிடிவி தினகரன் கூறியது குறித்து கருத்து தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை. மேலும் அதிமுக உட்கட்சி பிரச்சினை பற்றி கருத்து கூற விரும்பவில்லை. 2026 தேர்தலுக்குள் கூட்டணியில் நிலவும் அனைத்து பிரச்சினைகளும் தீர்ந்துவிடும்." என்றார்.





# ஜெருசலேமில் தீவிரவாத தாக்குதல்: 6 பேர் உயிரிழப்பு; 20 பேர் காயம்!

இஸ்ரேலின் ஜெருசலேம் பகுதியில் பஸ் நிலையத்தில் நின்றிருந்த பொதுமக்கள் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

திடீரென நடத்தப்பட்ட இந்த துப்பாக்கிச் சூடு தாக்குதலில் 6 பேர் கொல்லப்பட்டனர். மேலும், 20 இருக்கும் மேற்பட்டார் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் உலகெங்கும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

பல நாடுகளின் தலைவர்கள் தங்கள் கண்டனங்களை தெரிவித்துள்ளனர். மத்திய கிழக்கு பிராந்தியத்தில் கடந்த சில மாதங்களாகவே தொடர்ச்சியாகப் பதற்றமான சூழல் நிலவி வருகிறது. குறிப்பாக இஸ்ரேலைச் சுற்றிலும் பதற்றம் அதிகமாகவே இருக்கிறது.

இந்த நிலையில், ஜெருசலேத்தில் நேற்று மிக மோசமான ஒரு தாக்குதல் நடந்துள்ளது. ஜெருசலேமின் புறநகர்ப் பகுதியில் அமைந்துள்ள பஸ் நிறுத்தம் அருகே பயங்கரவாதிகள் இருவர் திடீரென தாக்குதல் நடத்தியுள்ளனர்.

அங்கிருந்த அப்பாவி மக்களைக் குறிவைத்து இவர்கள் சரமாரியாகத் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். இந்த துப்பாக்கிச் சூட்டில் குறைந்தது 6 பேர் கொல்லப்பட்டனர் எனவும் 20 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதல் காரணமாகச் சம்பவ இடத்திலேயே நான்கு பேர் உயிரிழந்தனர். இருவர் மருத்துவமனையில் சிகிச்சை பெறும்போது உயிரிழந்தனர். இதன் மூலம் இந்தத் தாக்குதலில் உயிரிழந்தோர் எண்ணிக்கை ஆறாக உயர்ந்துள்ளது. மேலும், 7 பேர் மருத்துவமனையில் உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருவதால் உயிரிழப்புகள் மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

அங்கு இயக்கப்படும் எகட் பேருந்து 62 என்ற பஸ்ஸில் ஏறி தீவிரவாதிகள் தாக்கியுள்ளனர். திடீரென நடந்த இந்த துப்பாக்கிச் சூட்டால் பொது மக்கள் பயந்து போய் ஓடினர். இதையடுத்து இஸ்ரேல் பாதுகாப்புப் படை வீரர் அந்த தீவிரவாதிகளைச் சுட்டுக் கொன்றுள்ளார்.

துப்பாக்கிச் சூடு குறித்து தகவல் கிடைத்தவுடன் சம்பவ இடத்திற்கு விரைந்த அவசர உதவி பிரிவினர் அங்குக் காயமடைந்தோரை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இந்த சம்பவம் உலகெங்கும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. தீவிரவாத தாக்குதலுக்கு பல்வேறு உலக தலைவர்களும் கண்டனம் தெரிவித்து வருகிறார்கள்.

அதன்படி இந்திய பிரதமர் மோடியும் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு இரங்கல் தெரிவித்ததோடு, காயமடைந்தவர்கள் விரைவில் குணமடையவும் பிரார்த்தனை செய்வதாக சமூக ஊடகத்தில் பதிவிட்டுள்ளார்.



















# நேபாளத்தில் போராட்டம்: சமூக ஊடக தடை நீக்கம்

## 19 பேர் உயிரிழப்பு!

நேபாளத்தில் ஏற்பட்ட போராட்டத்தில் 19 பேர் உயிரிழந்ததையடுத்து சமூக ஊடகங்கள் மீதான தடை நீக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் விதிக்கப்பட்ட இந்த சமூக ஊடகத் தடையை அரசாங்கம் நீக்கியுள்ளதாக அமைச்சரவை செய்தித் தொடர்பாளரும் தகவல் தொழில்நுட்ப அமைச்சருமான ப்ரித்வி சுபா குருங் இன்று காலை தெரிவித்தார்.

சமூக ஊடகங்களுக்குத் தடை விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து நேபாளத்தில் உள்ள இளைஞர்கள், பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட ஆயிரக்கணக்கானோர் காத்மண்டுவில் போராட்டத்தில் நேற்று ஈடுபட்டனர்.





நேபாளத்தின் நாடாளுமன்றத்தைப் போராட்டக்காரர்கள் சூழ்ந்ததால் தலைநகர் காத்மண்டுவில் பதற்றம் ஏற்பட்டது.

இந்த போராட்டத்தின் போது நேபாள பாதுகாப்புப் படையினருடனான மோதல்களில் குறைந்தது 19 பேர் வரை உயிரிழந்துள்ளனர். 100 இற்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

இதனையடுத்து 26 சமூக ஊடகங்களுக்கான தடை நீக்கப்பட்டுள்ளது.

# தாய்லாந்தின் முன்னாள் பிரதமருக்கு ஒரு வருட சிறைத்தண்டனை விதிப்பு





தாய்லாந்தின் முன்னாள் பிரதமர் தக்சின் ஷினவத்ரவுக்கு அந்நாட்டு உயர் நீதிமன்றம் ஒரு வருடம் சிறைத் தண்டனை விதித்துள்ளது.

இது செல்வாக்கு மிக்க அரசியல் வம்சத்திற்கு மற்றொரு அடியாகும்.

அவர் முன்பு ஒரு மருத்துவ மனையில் சிறைத்தண்டனை அனுபவித்ததால், அதன் ஒரு பகுதியை அவர் சிறையில் கழிக்க வேண்டும் என்றும் தீர்ப்பில் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த உயர்மட்ட வழக்கு, முந்தைய ஊழல் தண்டனையுடன் தொடர்புடையது.

2001 ஆம் ஆண்டு முதன்முதலில் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதிலிருந்து தாக்சினும் அவரது குடும்பத்தினரும் தாய்லாந்து அரசியலில் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர்.

அவரது மகள் பேடோங்டார்ன் முன்பு பிரதமராகப் பணியாற்றினார்.

ஆனால் கம்போடியாவின் ஹுன் சென்னுடனான கசிந்த தொலைபேசி அழைப்புடன் தொடர்புடைய வழக்கில், அரசமைப்பு நீதிமன்றம் நெறிமுறைத் தரங்களை மீறினார் என தீர்ப்பளித்ததைத் தொடர்ந்து கடந்த மாதம் பதவியில் இருந்து நீக்கப்பட்டார்.

இந்த நிலையில், 76 வயதான தாக்சினின் அண்மைய வழக்கு அவரது பிரதமர் பதவியுடன் தொடர்புடைய முந்தைய தண்டனையிலிருந்து உருவாகிறது.

முன்னாள் பிரதமர் 2006 இல் ஒரு இராணுவ சதியில் பதவி நீக்கம் செய்யப்பட்டு, பல ஆண்டுகள் சுயமாக நாடுகடத்தப்பட்டார்.

2023 ஆம் ஆண்டு அவர் தாய்லாந்துக்குத் திரும்பியபோது, அவர் உடனடியாக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு, பதவியில் இருந்த காலத்தில் ஊழல் மற்றும் அதிகார துஷ்பிரயோகம் செய்ததற்காக குற்றவாளி எனக் கண்டறியப்பட்டார்.

அவருக்கு எட்டு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

தாக்சின் அரச மன்னிப்பு கோரியதைத் தொடர்ந்து, தாய் மன்னர் அவரது தண்டனையை ஒரு வருடமாக குறைத்தார்.

ஆனால் இதய பிரச்சினைகள் குறித்து முறைப்பாடு அளித்த பின்னர் அவர் விரைவாக பொலிஸ் பொது மருத்துவமனையின் சொகுசுப் பிரிவுக்கு மாற்றப்பட்டதால், அவர் ஒரு நாளுக்கும் குறைவான நேரத்தை மட்டுமே சிறைச்சாலையில் கழித்தார்.

அவர் ஆறு மாதங்கள் அங்கேயே இருந்தார், பின்னர் பிணை பெற்று பேங்கொக்கில் உள்ள அவரது வீட்டிற்குச் சென்றார்.

கனடா முரசு

செவ்வாய்க்கிழமை 09/09/2025

**மரதன் ஓட்டப் போட்டியில் அசத்தினார் கனடிய பிரதமர்**



03



# அவசரமாக தரையிறக்கப்பட்ட விமானம்: பயணிகளுக்கு உயிர் பாதிப்பு கிடையாது

**டொரொன்டோவிலிருந்து செயிண்ட் மார்டினுக்கு புறப்பட்ட வெஸ்ட்ஜெட் 2276 விமானம், பிரின்சஸ் ஜூலியானா சர்வதேச விமான நிலையத்தில் அவசரமாக தரையிறக்கப்பட்டுள்ளது.**

**விமானத்தின் அவசர வெளியேறும் சறுக்கிகள் திறக்கப்பட்டு, பயணிகள் மற்றும் பணியாளர்கள் அனைவரும் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர்.**

உயிரிழப்பு அல்லது காயம் எதுவும் இல்லை எனவும், சம்பவம் தொடர்பான துல்லியமான விவரங்கள் இன்னும் விசாரணையில் உள்ளன எனவும் விமான சேவை நிறுவனம் தெரிவித்துள்ளது.

விமானம் சம்பவத்துக்குப் பிறகு செயிண்ட் மார்டினில் தரையிறங்கிய டொரொன்டோவாசிகள், தங்கள் வீடு திரும்பும் பயணம் ரத்து செய்யப்பட்டதால் அசௌகரியங்களை எதிர்நோக்க நேரிட்டுள்ளது.

விமானம் அவசரமாக தரையிறக்கப்பட்டதாகவும் சிலர் சமூக ஊடகங்களில் விபத்தாக பதிவு செய்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விமானம் எதனால் மிக அவசரமாக தரையிறக்கப்பட்டது என்பது பற்றிய விபரங்கள் எதுவும் இதுவரையில் வெளியிடப்படவில்லை.









# கனடாவை புறக்கணித்தனர் இந்தியாவின் மாணவர்கள்

சர்வதேச மாணவர்கள் மீது கனடா கடும் கட்டுப்பாடுகளை விதித்துவருவதால், அவர்கள் வேறு நாடுகள் மீது தங்கள் கவனத்தைத் திருப்பி வருகிறார்கள்.

கனடாவில் கல்வி கற்கச் செல்லும் சர்வதேச மாணவர்களில் முக்கிய இடம்பிடித்துவந்தது இந்திய மற்றும் சீன ஆகும்.

இந்நிலையில், இந்திய மாணவர்கள் கனடாவின் கட்டுப்பாடுகள் காரணமாக வேறு நாடுகள் பக்கம் தங்கள் பார்வையைத் திருப்பத் துவங்கியுள்ளார்கள்.

அவர்கள் தங்கள் விருப்ப நாடாகத் தேர்வு செய்துள்ள நாடு, அமெரிக்கா அல்ல, ஜேர்மனி.

2022 இல் 13.2 வீத இந்திய மாணவர்கள் ஜேர்மனியில் கல்வி கற்க விண்ணப்பித்த நிலையில், 2024, 25 இல் ஜேர்மனியில் கல்வி கற்க விண்ணப்பித்த இந்திய மாணவர்கள் எண்ணிக்கை 32.6 சதவிகிதமாக அதிகரித்துள்ளது.

அதே நேரத்தில், கனடாவில் கல்வி கற்க விண்ணப்பித்த இந்திய மாணவர்கள் எண்ணிக்கை, அதே காலகட்டத்தில் 17.85 வீதத்திலிருந்து 9.3 வீதமாக குறைந்துவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது.



# கனடாவின் கிழக்கு பகுதியில் உறைபனி குறித்து எச்சரிக்கை

கனடாவின் கிழக்கு பகுதியில் சில பகுதிகளில் உறைபனிப் பொழிவு குறித்து எச்சரிக்கை அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

மேலும், கனடாவின் மேற்கு மாகாணங்களில் தொடர்ச்சியான காட்டு தீ காரணமாக இன்று பல பகுதிகளில் காற்றுத் தரம் குறித்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் கொலம்பியா, ஆல்பர்டா, சஸ்கச்சுவான் மற்றும் வடமேற்கு டெரிட்டோரிஸ் உள்ளிட்ட மாகாணங்களின் பல பகுதிகள் காட்டுத்தீயினால் பாதிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக பிரிட்டிஷ் கொலம்பியாவில் சென்ட்ரல் ஒகனாகன், கூட்டனே ஏரி, ஆல்பர்டாவில் லெத்ப்ரிட்ஜ், ஹை லெவல், சஸ்கச்சுவானில் பஃப்பலோ , பியூவல், நார்த்வெஸ்ட் டெரிட்டோரிஸில் ஃபோர்ட் சிம்ப்சன் ஆகிய இடங்களில் எச்சரிக்கை அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இந்த பகுதிகளில் உள்ள மக்கள் வீடுகளில் தங்கியிருக்கவும், கதவுகள், ஜன்னல்கள் மூடியிருக்கவும் அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

காட்டு தீ நேரத்தில் புகை நிலைமை திடீரென மாறக்கூடும். எனவே வெளிப்புற செயல்பாடுகளை தவிர்க்கவும் அல்லது ஒத்திவைக்கவும் என கனடிய சுற்றுச்சூழல் திணைக்களம் எச்சரித்துள்ளது. அதேபோல் நோவா ஸ்கோஷியா வின் அனபோலிஸ் கவுண்டியிலும் காற்றுத் தர எச்சரிக்கை அறிவிக்கப்பட்டுள்ளது.

அங்கு தீ அணைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதே வேளை, கிழக்கு கனடாவின் காரணமாக ஒன்டாரியோ, க்யூபெக் மற்றும் நியூப்ரன்சுவிக் மாகாணங்களின் பல பகுதிகளில் உறைபனி எச்சரிக்கை அறிவிக்கப்பட்டுள்ளது.

உறைபனியால் பாதிக்கக்கூடிய தாவரங்கள் மற்றும் பயிர்களைப் பாதுகாக்க, அவற்றை மூடி வைக்குமாறு விவசாயிகள், வீடுதோட்டக்காரர்கள் ஆகியோருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.



# மரதன் ஓட்டப் போட்டியில் அசத்தினார் கனடிய பிரதமர்

கனடிய பிரதமர் மார்க் கார்னி அண்மையில் மரதன் ஓட்டப் போட்டியொன்றில் பங்கேற்று அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளார்.

வடக்கு டொரொண்டோவின் ஹாலிபோர்டன் வனப் பகுதியில் இந்த மரதன் ஓட்டப் போட்டி நடைபெற்றுள்ளது.

கனடவின் மிக நீண்ட தூரங்களைக் கொண்ட மரதன் ஓட்டப் போட்டிகளில் ஒன்றாக இந்தப் போட்டி கருதப்படுகின்றது.

இந்தப் போட்டியில் பிரதமர் கர்னி 58ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

26 கிலோ மீற்றர் தூரத்தைக் கொண்ட இந்த மரதன் ஓட்டத்தை பிரதமர் கர்னி மூன்று மணித்தியாலங்கள் 45 நிமிடங்களில் ஓடிக் கடந்துள்ளார்.

கடந்த 2013 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற ஒட்டாவா மரதன் மற்றும் லண்டன் மரதன் ஓட்டப் போட்டிகளிலும் பங்கேற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

கனடாவில் நடைபெற்று வரும் மரதன் ஓட்டப் போட்டிகளில் மிகவும் கடினமான போட்டிகளில் ஒன்றாக பிரதமர் பங்கேற்ற போட்டி கருதப்படுகின்றது.




# மொன்றியலின் வடப்பகுதியில் மனித உடல் பாகங்கள் மீட்பு

கனடாவின் மொன்றியல் நகரின் வடப்பகுதியில் உள்ள ரிவர் டெஸ் பெராய்ரிஸ் ஆற்றங்கரையில் மனித உடல் பாகங்கள் மீட்கப்பட்டுள்ளன.

அல்பர்ட் பொராசோ பொலெவார்ட் மற்றும் ட்ரயாபியு அவன்யூ சந்திப்பு அருகே தகவல் கிடைத்தது.

சம்பவ இடத்தைச் சுற்றி விசாரணைக்காக பெரிய பாதுகாப்பு வளையத்தை பொலிஸார் அமைத்துள்ளனர்.

பொலிஸ் மோப்ப நாய்களும் தேடுதல்களுக்காக ஈடுபடுத்தப்பட்டன என தெரிவிக்கப்படுகின்றது.

உடல் அங்கு எவ்வளவு நேரமாக இருந்தது, அந்த நபர் எவ்வாறு இறந்தார் என்பது இதுவரை தெரியவில்லை.

மேலும் எந்த உடல் பகுதி கண்டு பிடிக்கப்பட்டது என்பதைப் பற்றியும் பொலிஸார் எந்த விவரமும் வெளியிடவில்லை.